
இ. பரீஸவ்

# கா. மார்க்ஸ் எழுதிய "கூலி, விலை, லாபம்"

முன்னேற்றப் பதிப்பகம்



Rs. 10/-

இ. பரீஸவ்

# கா. மார்க்ஸ் எழுதிய “கூலி, விலை, லாபம்”

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம். ஏ.

**Борисов Е.**

О РАБОТЕ К. МАРКСА

«ЗАРАБОТНАЯ ПЛАТА, ЦЕНА И ПРИБЫЛЬ»

*на тамильском языке*

**Borisov Ye.**

MARX'S "WAGES, PRICE AND PROFIT"

*in Tamil*

© Progress Publishers, 1986

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Б $\frac{0102010000-154}{014(01)-89}$ 305—89

ISBN 5-01-0001462-9

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . 5

கூலி தொழிலாளர்களுடைய மாறாத ''குறைந்த பட்ச வாழ்க்கைச் சாதனங்களுடன்'' பொருந்துகிறது என்னும் தத்துவத்தின் ஆதாரமற்ற தன்மை . 14

கூலி உயர்த்தப்படும் பொழுது விலைகள் ஏன் நேரடியாக அதிகரிப்பதில்லை? . . . . . . 29

உழைப்பளவு மதிப்புத் தத்துவம் . 39

கூலியின் விதி . . . . . . . . 58

உபரி மதிப்பின் உற்பத்தி . . . 69

லாபம்: அதன் சாராம்சமும் வினியோகமும் . . . . . . . . . 84

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தின் செயல்திட்டம் . . . . 100

# முன்னுரை

தொழிலாளர்கள் தம்முடைய உரிமைகளுக்காக, குறிப்பாக கூலி உயர்வுக்காக நடத்துகின்ற விடாப்பிடியான, வீரமிக்க போராட்டங்களைப் பற்றி நாள்தோறும் பத்திரிகைச் செய்திகளில் படிக்கிறோம்.

தொழிலாளர்கள் ஏன் கூலி உயர்வுக்குப் போராடுகிறார்கள்? அவர்கள் எத்தகைய வெற்றியை எதிர்பார்க்க முடியும்? தொழிலாளர்களின் கூலி உயர்வுப் போராட்டத்தின் பால் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஸ்தாபனங்களும் தொழிற்சங்கங்களும் எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்?

1860க்களின் நடுப்பகுதியில் மேற்கூறிய கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலை தொழிலாளர் இயக்கத்துக்கு ஏற்பட்டது. அப்பொழுது ஐரோப்பா முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் வேகமாகப் பரவிக்கொண்டிருந்தன. எங்கும் தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரினார்கள். இக்கோரிக்கையை பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் எதிர்த்தார்கள்; முதலாளிகளின் நலன்களைப் பாதுகாப்பவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தது இயற்கையானதே; ஆனால் பிரிட்

டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் மிகவும் தீவிரமாகப் பங்கெடுத்த ஒருவர், சர்வ தேசத் தொழிலாளர் சங்கத்தின் (முதலாவது அகிலத்தின்) பொதுக் கவுன்சிலின் உறுப்பினர் ஜான் வேஸ்டன் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளப் போராடுவது வீண் என்று நிரூபிக்க முனைந்தார். கூலி உயர்வுகளினால் தொழிலாளர்களுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படாது, ஆகவே இத்திசையில் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள் செய்கின்ற முயற்சிகள் வீணே என்று அவர் வலியுறுத்தினார். பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இதர நாடுகளில் தொழிற்சங்க இயக்கங்களின் தலைவர்கள் பலரும் இதே கருத்துகளைக் கூறினார்கள்.

அச்சமயத்தில் மொத்த சர்வதேசத் தொழிலாளர் இயக்கமும் அதன் முன்னணிப் படையான முதலாவது அகிலமும் ஒரு மாபெரும் பிரச்சினையை முடிவு செய்ய வேண்டியிருந்தது. கூலி உயர்வுக்குத் தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டத்தைத் தீவிரமாக ஆதரிப்பதா அல்லது அப்போராட்டத்தை எதிர்ப்பதா என்பது அப்பிரச்சினையாகும்.

இப்பிரச்சினைக்கு விஞ்ஞான ரீதியான முடிவு காண்பதற்கு எல்லாப் பிரச்சினைகளையும் ஆழமாக ஆராய்வது அவசியமாக இருந்தது; குறிப்பாக, கூலியின் அளவை நிர்ணயிப்பது எது என்பதைக் கண்டுபிடிக்க

வேண்டும். பண்டங்களின் விலைகள் மற்றும் முதலாளிகளின் லாபங்களுடன் கூலி எப்படி இணைக்கப்படுகிறது? கூலி, விலை மற்றும் லாபத்தின் இடையுறவுகளைப் புரிந்து கொள்வதற்கு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படைகளையும் அதன் வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற விதிகளையும் நுணுக்கமாக ஆராய வேண்டும்.

மாபெரும் சிந்தனையாளரும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரருமான கார்ல் மார்க்ஸ் தன்னுடைய நண்பரும் கூட்டாளியுமான பிரெடெரிக் எங்கெல்சுடன் இணைந்து 1864 முதல் 1876 வரை முதலாவது அகிலத்துக்குத் தலைமை தாங்கினார். மேலே கூறப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்கின்ற மாபெரும் முயற்சியைச் செய்த முதல் நபர் அவரே. மார்க்ஸ் 1840க்களின் கடைசிப் பகுதியில் ஒரு பொருளாதாரத் தத்துவத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார். அவர் பூர்ஷ்வாப் பொருளியலாளர்களால் மறைக்கப்பட்ட முதலாளித்துவ அமைப்பின் சாராம்சத்தை வெளிப்படுத்தினார்; முதலாளித்துவ அமைப்பில் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான நிலையை விளக்கினார்; முதலாளித்துவ அமைப்பு தவிர்க்க முடியாதபடி அழியும், புரட்சியின் மூலம் சோஷலிச மாற்றம் நடைபெறும் என்பதை அவர் நிரூபித்தார். மார்க்ஸ் 1865ஆம் ஆண்டுக்கு முன்பே தன்னுடைய மிக முக்கியமான நூலாகிய மூலதனத்தை

அநேகமாக எழுதி முடித்திருந்தார். அவர் அந்த நூலில் விஞ்ஞான அரசியல் பொருளாதாரத்தை விரித்துக் கூறி தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்துக்குத் தத்துவ ரீதியான ஆயுதத்தைக் கொடுத்தார். இந்த உறுதியான விஞ்ஞான அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு சமூக உரிமைகளுக்கான தொழிலாளர் போராட்டம் எழுப்பியிருந்த சிக்கலான, உடனடியான கேள்விகளுக்கு அவர் விரிவான முறையில் பதிலளித்தார்.

மார்க்ஸ் 1865இல் மூலதனம் நூலின் முதல் தொகுதியின் கையெழுத்துப் பிரதியை அச்சுக்குத் தயாரித்துக் கொண்டிருந்தார்; அத்தொகுதியிலடங்கிய முக்கியமான கருத்துகள் தொழிலாளர் இயக்கத்தை இன்னும் எட்டவில்லை. முதலாவது அகிலத்தின் உறுப்பினர்கள் சிலர் அன்று பரவலாக இருந்த குட்டி பூர்ஷ்வா மற்றும் பூர்ஷ்வாத் தத்துவங்களின் தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தார்கள்; கூலி, விலை மற்றும் லாபத்தைப் பற்றிய பிரச்சினைகளில் இத்தாக்கம் அதிகமாகவே இருந்தது. எனவே தொழிலாளர் இயக்கத்தை எதிரிட்ட பல தத்துவ மற்றும் செய்முறைப் பிரச்சினைகளைப் பற்றி முதலாவது அகிலத்தின் தலைமைக் குழுவினர்களிடம் விளக்குதல் மார்க்சின் உடனடிக் கடமையாக இருந்தது.

மார்க்ஸ் 1865 ஜூன் 20 மற்றும் 27ந் தேதிகளில் முதலாவது அகிலத்தின் பொதுக் கவுன்சில் கூடிய பொழுது கூலி, விலை, லாபம்

என்னும் தலைப்பில் நீண்ட அறிக்கையளித்தார். ஜான் வேஸ்டனுடைய சொற்பொழிவுக்கு பதிலளிக்கின்ற முறையில் அவர் அந்த அறிக்கையைத் தயாரித்திருந்தார். மார்க்ஸ் தன்னுடைய பொருளாதாரத் தத்துவத்தின் முக்கியமான கருத்துகளை தெளிவாக, எளிமையாக எடுத்துக் கூறினார்; கூலி உயர்வுக்குப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தின் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கினார். உழைக்கும் மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைத் தாக்குகின்ற முதலாளிகளிடம் பணிவாக, செயலற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறியவர்களை அவர் தீவிரமாக விமர்சனம் செய்தார். அதே சமயத்தில், ஆளும் வர்க்கத்தினருக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற பொருளாதார மற்றும் அரசியல் போராட்டங்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்பதை மார்க்ஸ் நிரூபித்தார்.

கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கை ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அக்கையெழுத்துப் பிரதி நெடுங்காலம் பாதுகாக்கப்பட்டிருந்தது. மார்க்ஸ் மரணமடைந்த பிறகு அவருடைய மகள் எலியனோர் அதை முதல் முறையாக லண்டனில் 1898இல் மதிப்பு, விலை, லாபம் *(Value, Price and Profit)* என்னும் தலைப்பில் எட்வார்டு ஏவ்லிங்

கின்* முன்னுரையுடன் வெளியிட்டார். கையெழுத்துப் பிரதியில் அறிமுகத்துக்கும் முதல் ஆறு பிரிவுகளுக்கும் தலைப்புகள் தரப்படவில்லை; ஏவ்லிங் தலைப்புகளைக் கொடுத்தார். அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட பதிப்புகளில் அறிக்கையின் பிரதான தலைப்பைத் தவிர மற்ற தலைப்புகள் அப்படியே பின்பற்றப்பட்டன.

மார்க்சின் அறிக்கை 1898இல் ஜெர்மன் மொழியில் *Die Neue Zeit* (''புதிய காலம்'') இதழிலும் ருஷ்ய மொழியில் ஷிஸின் (''வாழ்க்கை'') சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு அது பல மொழிகளில் பன்முறை வெளியிடப்பட்டிருக்கிறது.

கூலி, விலை, லாபத்தில் ஒன்றுக்கொன்று கணிசமாக வேறுபடுகின்ற, ஆனால் நெருக்கமான இடையுறவுள்ள மூன்று பகுதிகளைப் பார்க்க முடியும்.

முதல் ஐந்து பிரிவுகளடங்கிய முதல் பகுதியில் கூலி, விலை மற்றும் லாபத்தைப் பற்றி அன்று பரவலாக இருந்த பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வாத் தத்துவங்கள் ஆழமாக விமர்சனம் செய்யப்படுகின்றன. இங்கே மார்க்ஸ் பொருளாதாரத் தத்துவம், செய்

---

* எட்வார்டு ஏவ்லிங் (1851—1898)— ஆங்கிலேய சோஷலிஸ்ட், எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர். மார்க்ஸ் எழுதிய மூலதனத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்களில் ஒருவர், மார்க்சின் மகள் எலியனோருடைய கணவர்.

முறைத் தொழிலாளர் இயக்கம் ஆகிய இரண்டுக்குமே ஜீவாதாரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்த கடமையை நிறைவேற்றினார். முதலாளித்துவ அமைப்பின் சமூக அநீதியை நியாயப்படுத்துவதற்கும் நிரூபிப்பதற்கும் மனிதனை மனிதன் சுரண்டலைத் தொழிலாளி வர்க்கம் ஒழிப்பதைத் தடுப்பதற்கும் பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் செய்த தத்துவச் சோடனைகள் எல்லாவற்றையும் மார்க்ஸ் நொறுக்கினார்.

அவர் இந்த அறிக்கையின் இரண்டாம் பகுதியில் (பிரிவுகள் 6—12) தன்னுடைய புதிய கண்டுபிடிப்புகளை, அரசியல் பொருளாதாரத்தில் அவர் நிறைவேற்றிய புரட்சியின் பலன்களை வெளியிடுகிறார். அவர் விரித்துரைத்த உழைப்பளவு மதிப்புத் தத்துவத்துக்கும் அவருடைய பொருளாதாரத் தத்துவத்தின் முக்கியமான பகுதியாகிய உபரி மதிப்புத் தத்துவத்துக்கும் இது பொருந்தும். மார்க்ஸ் உபரி மதிப்புத் தத்துவத்தை உருவாக்கிய பொழுது புறவயமான (அதாவது எவ்வகையான விருப்பத்திலிருந்தும் சுதந்திரமான) கூலிகளின் சட்டத்தை வெளியிட்டதுடன் முதலாளிகளின் லாபம் மற்றும் இதர சுரண்டும் வர்க்கங்களின் வருமானங்களின் மெய்யான தன்மையை விளக்கினார்.

அறிக்கையின் கடைசிப் பகுதியில் (பிரிவுகள் 13—14) தொழிலாளர்கள் கூலி உயர்வுக்கு அல்லது கூலியைக் குறைப்பதைத் தடுப்பதற்கு நடத்துகின்ற போராட்டத்தின்

மிகவும் முக்கியமான உதாரணங்கள் ஆராயப் படுகின்றன. பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நடத்துகின்ற வர்க்கப் போராட்டத்தின் செயல்திட்ட நோக்கங்கள் இங்கே விளக்கப்படுகின்றன.

மார்க்சின் கூலி, விலை, லாபம் இன்றும் மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. மார்க்ஸ் எழுதிய மூலதனத்தின் முக்கியமான விஞ்ஞானக் கருத்துகள் இந்த அறிக்கையில் சிறப்புடன் எடுத்துரைக்கப்படுவதில் அதன் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. இக்கருத்துகளில் தேர்ச்சி பெறுதல் முதலாளித்துவ அரசுகளிலும் முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றுகின்ற வளர்முக நாடுகளிலும் தொழிலாளர்களின் உண்மையான நிலையைப் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது; தொழிலாளர்கள் கூலி உயர்வுக்காக இடைவிடாமல் போராடுவதற்குரிய காரணங்களையும் அப்போராட்டத்தின் சமூக பொருளாதார விளைவுகளையும் விளக்குகிறது.

மார்க்சின் அறிக்கை அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் அவசரமான, செய்முறைக் கடமைகளுடன் பிரிக்க முடியாதபடி எப்படி இணைக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. தொழிலாளர்கள் தங்களுடைய சமூக உரிமைகளுக்கு, எல்லா மக்களினங்களும் முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து முழு விடுதலை அடைவதற்குத்

திட்டவட்டமான போராட்டத் திட்டத்தைத் தருகிறது. அதே சமயத்தில், இப்பிரசுரம் உழைக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரங்கள் மற்றும் சமூக உரிமைகள் மீது முதலாளிகள் மற்றும் பூர்ஷ்வா அரசுகளின் தாக்குதலை நியாயப்படுத்துகின்ற நவீன பூர்ஷ்வாப் பொருளாதாரக் கருத்துகள் பொய்யானவை என்பதற்கு ஆதாரங்களை அளித்து மார்க்சிய லெனினியவாதிகளை வலுப்படுத்துகிறது.

## கூலி தொழிலாளர்களுடைய மாறாத "குறைந்தபட்ச வாழ்க்கைச் சாதனங்களுடன்" பொருந்துகிறது என்னும் தத்துவத்தின் ஆதாரமற்ற தன்மை

மார்க்ஸ் கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கையை அளித்த பொழுது முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற வர்க்கப் போராட்டத்தின் மிகவும் உடனடியான பிரச்சினைகளில் ஒன்றைப் பற்றி பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் முழுவதையும் நிர்மானமாகத் தாக்கினார். அவர் வேஸ்டனுடன் மட்டுமே தத்துவ ரீதியான விவாதத்தை நடத்தினார் என்று தோன்றும். ஆனால் வேஸ்டன் தொழிலாளர்கள் மத்தியில் பரப்பிய கருத்துகள் அவருடைய சொந்தக் கருத்துகள் அல்ல. பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா சித்தாந்திகள் அப்பொழுது விரித்துரைத்த கூலித் தத்துவங்களைத்தான் அவர் கடன் வாங்கியிருந்தார்.

தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி கொடுப்பதை நியாயப்படுத்த முயலுதல், தொழிலாளியும் அவருடைய குடும்பமும் வெறும் வாழ்க்கை நடத்துவதற்கு இன்றியமையாத வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பின் அளவுக்கு அவர்களுடைய கூலியைக் குறைத்தல் ஆகியவை மார்க்ஸ் காலத்தில் கூலியைப் பற்றிய பூர்ஷ்வாக் கருத்துகளின்

பொதுவான உருவரையாகும். பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் தோன்றிய காலத்திலிருந்து (17—18ஆம் நூற்றாண்டுகளிலிருந்து) ஆங்கில மற்றும் பிரெஞ்சுப் பொருளியலாளர்கள் அனைவரும் இக்கருத்தையே கூறினார்கள்.

தொழிலாளியின் ''வாழ்க்கைக்கு இன்றியமையாத குறைந்தபட்ச சாதனங்களுடன்'' கூலி பொருந்துகிறது என்னும் கருத்து விஞ்ஞான ரீதியானது என்று நிரூபிப்பதற்கு பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் பலர் முயற்சி செய்தார்கள். ஆகவே அவர்கள் மால்தஸ்* உருவாக்கிய பிற்போக்கான மக்கள்தொகைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டார்கள். தொழிலாளி வர்க்கத்தின் ''மட்டுமீறிய'' இனப்பெருக்கமே அது வறுமையில் வாடுவதற்குக் காரணம்; அதன் விளைவாக, மக்கள்தொகைப் பெருக்கம் வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தியைப் பன்மடங்கு விஞ்சிவிடுகிறது என்று மால்தஸ் விளக்கினார். மக்கள்தொகை பெருக்கல் விகிதத்தில் வளர்ச்சியடைகின்ற பொழுது வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி கூட்டல் விகிதத்தில் மட்டுமே அதிகரிக்கிறது, அதற்கு மக்களின் உடலியல் தன்மைகளே

---

* தாமஸ் ராபர்ட் மால்தஸ் (1766—1834)—ஆங்கிலேயப் பொருளியலாளர், பாதிரியார். கிரேட் பிரிட்டனில் கொச்சையான அரசியல் பொருளாதாரத்தை நிறுவியவர்களில் ஒருவர்.

காரணம் என்று அவர் எத்தகைய விஞ்ஞான ஆதாரமும் இன்றிக் கூறினார். மக்கள்தொகையின் அளவுக்கும் வாழ்க்கைச் சாதனங்களின் அளவுக்கும் இடையில் சரியான உறவுப் பொருத்தம் நிலவ வேண்டுமானால் மக்கள் கடுமையாக உழைக்க வேண்டும் அல்லது கொள்ளை நோய்கள், பஞ்சம், போர்க்ளில் மக்கள் அதிகமாக அழிந்து போக வேண்டும் என்று அவர் கூறினர்ர்.

மால்தசின் மனிதவிரோதக் கருத்துகள் கூலி நிதியைப் பற்றிய பூர்ஷ்வாத் தத்துவத்துக்கு அடிப்படையாக இருந்தன. வேஸ்டன் அதை உடனே எடுத்துக் கொண்டார். அத்தத்துவத்தை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். எல்லாத் தொழிலாளர்களின் கூலிநிதியும் மாறாதது, நிலையானது; தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அவர்களுடைய சராசரிக் கூலி குறைந்து விடும். தொழிலாளர்களின் ஏதாவதொரு பகுதியினர் கூலி உயர்வு பெற்றால் அது பொதுவில் மாறாத கூலி நிதியின் எஞ்சியுள்ள பகுதியைக் குறைக்கிறது. பின்னர் மற்ற தொழிலாளர்கள் குறைந்த கூலியைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடைய வேண்டும் அல்லது கூலி இல்லாதபடியால் உழைப்புச் சந்தையில் குவிய வேண்டும். தொழிலாளர்களின் ஏதாவதொரு பகுதியின் கூலி குறையும் பொழுது வேலை வாய்ப்பு அதிகரிக்கும்; ஏனென்றால் அதே கூலி நிதியைக் கொண்டு இன்னும் அதிகமான தொழிலாளர்

களுக்கு வேலை கொடுக்க இயலும், பிறகு வேலையின்மை குறையும்.

மேற்கூறிய கருதுகோளை விஞ்ஞான ரீதியில் நிறுவ இயலாமையை "உற்பத்தியும் கூலியும்" என்னும் முதல் பிரிவில் எடுத்துக்காட்டுகின்ற மார்க்ஸ் அது பொய்யான பிரமேயங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதை விளக்குகிறார். இப்பிரமேயங்கள் ஆட்சேபிக்கப்பட முடியாத உண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு மறுக்கப்பட முடியாதவையாக அங்கீகரிக்கப்படுகின்றன.

தேசிய உற்பத்தியின் பொது அளவு மாறாதது, நிலையான பரிமாணத்தைக் கொண்டது என்று இப்பிரமேயங்களில் முக்கியமான ஒன்று சுட்டிக் காட்டுகிறது. இதை ஆதாரமாகக் கொண்டு எல்லாத் தொழிலாளர்களின் உண்மையான கூலிகளின் மொத்த அளவு (அதாவது கூலியை, அதன் மூலம் வாங்கக் கூடிய பண்டங்களின் அளவைக் கொண்டு கணக்கிடுதல்) நிலையானது என்னும் கருத்து முன்வைக்கப்படுகிறது.

தொழிலாளர்கள் படைக்கின்ற தேசிய உற்பத்திப் பொருளின் மொத்த அளவு சார்ந்திருக்கின்ற காரணிகள் மாறுகின்ற இயல்பைக் கொண்டிருக்கின்றன என்பதைப் புறக்கணிப்பதால் இக்கருத்துரை தத்துவ ரீதியில் பொய்யானது என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். மார்க்ஸ் குறிப்பிடுகின்ற, ஆண்டுதோறும் புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்ற தேசிய உற்பத்திப் பொருள் தேசிய

வருமானம் என்று சொல்லப்படுகிறது. அதன் வளர்ச்சி பின்வரும் மாறுகின்ற காரணிகளைச் சார்ந்திருக்கிறது: அ) மக்கள்தொகையின் வளர்ச்சி; ஆ) மூலதனத்தின் வளர்ச்சி; இ) உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்தல். மேற்கூறியவற்றினால் ஒரு நாட்டின் உற்பத்திப் பொருளின் பொது அளவு நிலையாக இருக்கிறது என்பது எதார்த்தத்துக்குப் புறம்பானதாகும்.

மார்க்ஸ் பெற்ற இந்த முடிவு இன்றும் கூட உண்மையானதே. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளில் பொருளாதாரக் குறியீடுகளின் இயக்கியலைப் பற்றிய பின்வரும் புள்ளிவிவர அட்டவணை அதை நிரூபிக்கிறது:

**வளர்ச்சியடைந்த முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளில்**
**பொருளாதாரக் குறியிடுகளின் இயக்கியல்**
**(1960 = 1)**

| பொருளாதாரக் குறியீடுகள் | 1970 | 1985 |
|---|---|---|
| தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம்: | | |
| அ) வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் | 1.8 | 2.6 |
| ஆ) வளர்முக நாடுகள் | 2.0 | 3.1 |
| விவசாய உற்பத்தியின் வளர்ச்சி விகிதம்: | | |
| அ) வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் | 1.2 | 1.6 |
| ஆ) வளர்முக நாடுகள் | 1.3 | 2.0 |

அதே சமயத்தில், வளர்முக நாடுகளில் மாபெரும் கஷ்டங்கள் (குறிப்பாக, மக்களுக்கு உணவு அளிப்பதில்) இருந்தன, அவை இன்றும் நீடிக்கின்றன; ஏனென்றால் இந்த நாடுகள் பலவற்றில் மக்கள்தொகை விவசாய உற்பத்தியைக் காட்டிலும் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நாடுகளில் மக்கள்தொகையின் அதிகமான வளர்ச்சி விகிதத்துக்கு நம் காலத்திய புதிய மால்தசியவாதிகளும் பூர்ஷ்வா சமூகவியலாளர்களும் பொருளியலாளர்களும் வலியுறுத்துவதைப் போல மக்களின் கட்டுப்பாடில்லாத இனப்பெருக்கம் காரணம் அல்ல; காலனியாதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த நாடுகளில் சமூக பொருளாதார வளர்ச்சியும், மரண விகித இறக்கமும்—குறிப்பாக குழந்தை மரண விகிதம் குறைந்ததும்—இந்த நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சியை விரைவுபடுத்தியதில் தீர்மானமான பாத்திரத்தை வகித்தன. அதே சமயத்தில், வளர்முக நாடுகளில் பெரும்பான்மையானவை இன்று கூட பல நூற்றாண்டுக் காலமாக நிலவிய காலனியாதிக்கவாதிகளின் பாதகமான பொருளாதார விளைவுகளை அகற்ற முடியவில்லை. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இதர ஏகாதிபத்திய அரசுகளிடம் பொருளாதார ரீதியில் அடிமைப்படுவதிலிருந்தும் அவற்றின் கொள்ளையிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் பாட்

டாளி வர்க்கத்தின் உழைப்பினால் உருவாக்கப்பட்ட தேசிய உற்பத்திப் பொருளின் மெய்யான வளர்ச்சியைப் பற்றிய புள்ளிவிவரங்களைச் சுட்டிக் காட்டுவதுடன் நின்று விடவில்லை. அவர் தர்க்கவியலில், சிந்தனையின் விதிகளின் விஞ்ஞானத்தில் மேதை. தேசிய உற்பத்திப் பொருள் மற்றும் உண்மையான கூலியின் மொத்த அளவுகள் மாறாதவை என்னும் பூர்ஷ்வாப் பொருளியலாளர்களின் கூற்றுகள் தம்மளவில் தவறானவை என்பது ஒருபுறமிருக்க, தொழிலாளர்கள் கூலி உயர்வுக்குப் போராடக் கூடாது என்னும் ஆய்வுரைக்கு அவை அடிப்படையாகப் பயன்பட முடியாது என்பதை உறுதியான முறையில் விளக்கினார்.

தொழிலாளர்கள் ஆண்டுதோறும் படைக்கின்ற தேசிய உற்பத்திப் பொருள் மாறாத மொத்த அளவைக் கொண்டிருப்பதாக, உதாரணமாக, 80,000 மில்லியன் டாலர்கள் என்று அனுமானிக்கப்படுமானால் அது அந்த உற்பத்திப் பொருளின் தனிமுதலான அளவு மட்டுமே என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். எல்லாத் தொழிலாளர்களுடைய உண்மையான கூலிகளும் சார்புநிலை அளவாக, அதாவது தேசிய உற்பத்திப் பொருளின் மொத்த அளவின் பகுதியாக மட்டுமே இருக்கும். மேலும், அதில் முதலாளிகளுடைய லாபமும் சேர்ந்திருக்கிறது.

எல்லாத் தொழிலாளர்களின் மொத்தக் கூலி 20,000 மில்லியன் டாலர்கள் என்று

நாம் வைத்துக் கொண்டால் தேசிய உற்பத்திப் பொருள் என்னும் மாறாத அளவாகிய 80,000 மில்லியன் டாலர்களில் முதலாளிகளுடைய லாபம் 60,000 மில்லியன் டாலர்களாக இருக்கும்.

| தொழிலாளர்களின் கூலி | முதலாளிகளின் லாபம் |
|---|---|
| 20,000 மில்லியன் டாலர்கள் | 60,000 மில்லியன் டாலர்கள் |

தொழிலாளர்கள் 60,000 மில்லியன் டாலர்களுக்குக் கூலி உயர்வு பெறுவார்களானால் முதலாளிகளின் லாபம் 20,000 மில்லியன் டாலர்களாகக் குறைந்து விடும்.

| தொழிலாளர்களின் கூலி | முதலாளிகளின் லாபம் |
|---|---|
| 60,000 மில்லியன் டாலர்கள் | 20,000 மில்லியன் டாலர்கள் |

தேசிய உற்பத்திப் பொருளின் மொத்த அளவு மாறாமலிருப்பதை இந்த உதாரணங்களில் காண முடியும். ஆகவே தேசிய உற்பத்திப் பொருளின் அளவு நிலையாக இருக்கின்ற பொழுது கூட தொழிலாளர்கள் தங்களுடைய கூலிகளைக் கணிசமாக உயர்த்திக் கொள்ள முடியும்.

உண்மையான கூலியின் மொத்த அளவு மாறாதது என்னும் பொய்யான ஆய்வுரை

தொழிலாளர்கள் தங்களுடைய கூலி உயர்வுப் போராட்டத்தைக் கைவிடுவதற்கு அடிப்டையாகப் பயன்பட முடியாது என்பதையும் மார்க்ஸ் நிறுவினார்.

கூலியின் மொத்த அளவு நிலையானது என்னும் கோட்பாடு இரண்டு விதத்தில் உண்மையாக இருக்க வேண்டும்: அதைக் குறைக்க முடியாது, அதை அதிகப்படுத்த முடியாது. ஆனால் முதலாளிகள் எப்பொழுதும் கூலி மட்டத்தைக் குறைப்பதற்குப் பாடுபடுகிறார்கள், அதைச் செய்கின்ற சாத்தியமும் அவர்களுக்கு இருக்கிறது. கூலி மாறாதது என்னும் கோட்பாட்டின்படி பார்த்தால் முதலாளிகளின் நடத்தை சட்டவிரோதமாகும். தொழிலாளர்கள் தங்கள் கூலியை முந்திய அளவுக்கு உயர்த்துவதற்காகப் போராடுவதற்கு எல்லா நியாயங்களும் இருக்கின்றன. மார்க்ஸ் தன்னுடைய முடிவைப் பின்வரும் முறையில் நிறுவினார்: ''...எனவே, கூலியைக் குறைக்கும் முயற்சியையோ அல்லது செயலையோ எதிர்த்துத் தொழிலாளர்கள் நடவடிக்கை எடுப்பது நியாயமானதே.''*

தொழிலாளர்களின் கூலி நிதியின் மாறாத் தன்மையை நிரூபிப்பதற்கு வேஸ்டன் உபயோகித்த மற்றொரு வாதத்தின் போலியான தன்மையை மார்க்ஸ் எடுத்துக்காட்

---

* கா. மார்க்ஸ், பி.எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 5, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1985, பக்கம் 52.

டினார். பண வடிவத்தில் தரப்படுகின்ற கூலி பொதுவாக அதிகரிக்கும் பொழுது அதே கூலியைத் தருவதற்கு மேலும் அதிக மான பணம் தேவைப்படுகிறது என்று வேஸ்டன் கூறினார். இதை அவர் நிரூபிக்க வில்லை. பணத்தின் அளவு மாறாமலிருப்ப தால் அதே அளவு பணத்தைக் கொண்டு அதிகமான கூலி கொடுக்க முடியாது.

''கூலியும் நாணயமும்'' என்னும் தலைப்புக் கொண்ட மார்க்சின் அறிக்கையின் மூன்றா வது பிரிவு பண அளவு மாறாமலிருப்ப தாகச் சொல்லப்படுகின்ற வாதம் பணச் சுழற்சி விதிகளைப் பற்றிய அறியாமையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஒரு நாட்டில் பண்டப் பரிவர்த் தனையில் சம்பந்தப்பட்டிருக்கின்ற பணத் தின் மொத்த அளவு ஓர் ஆண்டில் விற்பனை செய்யப்படுகின்ற எல்லாப் பொருட்களின் விலைகளின் மொத்தத் தொகையை மட்டு மன்றி அதே பெயரைக் கொண்ட பண அலகு களின் சுழற்சி வேகத்தையும் கடன் வசதி யின் வளர்ச்சியையும் சார்ந்திருப்பதை இந்த விதிகள் எடுத்துக்காட்டுகின்றன.

1867இல் பிரசுரிக்கப்பட்ட மூலதனம்நூலின் முதல் தொகுதியில் ''பணம் அல்லது பண் டங்களின் சுழற்சி'' என்னும் அத்தியாயத்தில் மார்க்ஸ் பணச் சுழற்சியின் சூத்திரத்தை வகுத்தளித்தார். குறிப்பிட்ட காலப் பகுதி யில் புழக்கத்திலுள்ள பணத்தின் மொத்த அளவு பின்வரும் முறையில் நிர்ணயிக்கப்படு

கிறது: ''சுழற்சிச் சாதனம் மற்றும் வழங்கீட்டுச் சாதனத்தின் குறிப்பிட்ட சுற்றோட்ட வேகத்தின்படி அது விற்பனையாகின்ற பண்டங்களின் விலைகளின் மொத்தத்துடன் வர வேண்டிய வழங்கீடுகளின் தொகையையும் சேர்த்துக் கொண்டு வருவதில் ஒன்றையொன்று சரிப்படுத்திக் கொள்கின்ற வழங்கீடுகளைக் கழித்து கடைசியில், ஒரே நாணயம் சுழற்சிச் சாதனமாகவும் வழங்கீட்டுச் சாதனமாகவும் பயன்படுகின்ற சுற்றோட்டங்களின் எண்ணிக்கையைக் கழித்தால் வருவதற்குச் சமம்.''* மார்க்சின் சொற்களைப் பின்வரும் சூத்திரத்தின் வடிவத்தில் குறிப்பிடலாம்:

$$M=\frac{P+SP-CP-C}{N}$$

இச்சூத்திரத்தின்படி புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு (M) பண்டங்களின் விலைகளின் வரவின் மொத்தத் தொகையுடன் (P)வர வேண்டிய வழங்கீடுகளின் மொத்தத் தொகையை (SP) கூட்டி, ஒன்றையொன்று சரிப்படுத்திக் கொள்கின்ற வழங்கீடுகளைக் (CP) கழித்து, பணம் சுழற்சிச் சாதனமாக அல்லது வழங்கீட்டுச் சாதனமாகப் பயன்படுகின்ற பணச் சுற்றோட்டங்களின் எண்ணிக்கையைக் (C) கழித்து, எல்லாவற்றையும் அதே பெயரைக் கொண்ட பண அலகுகளின் சுற்

* K. Marx, *Capital*, vol. 1, Moscow, Progress Publishers, 1974, p. 138.

றோட்டங்களின் எண்ணிக்கையினால் (N)வகுத்தால் கிடைப்பதற்குச் சமம்.

மார்க்ஸ் இச்சூத்திரத்தை மனதில் கொண்டு இங்கிலாந்திலுள்ள வழங்கீட்டு முறையைத் தன்னுடைய அறிக்கையில் விளக்கினார். அந்த நாட்டில் வங்கி முறை விரிவாக வளர்ச்சியுற்றுக் குவிந்திருப்பதன் விளைவாக வழங்கீட்டுப் பொறியமைவு மிகவும் அதிகமான பூரணத்துவத்தை அடைந்திருக்கிறது. அங்கே பாக்டரித் தொழிலாளி வாரந்தோறும் தன்னுடைய கூலிப் பணத்தை வியாபாரியிடம் கொடுத்து அவசியமான வாழ்க்கைச் சாதனங்களை வாங்குகிறார். வியாபாரி வங்கியிலிருந்து தான் பெற்றிருக்கின்ற கடனுக்காக வாரந்தோறும் அந்தப் பணத்தை வங்கியில் கட்டுகிறார். வங்கி முதலாளி வாரந்தோறும் குறிப்பிட்ட தொகையை பாக்டரியின் முதலாளிக்குக் கடனாகத் தருகிறார். அந்த முதலாளி அப்பணத்தை மறுபடியும் தொழிலாளிக்குக் கூலியாகத் தருகிறார்; இப்படியே தொடர்ந்து நடைபெறுகிறது. இப்பொறியமைவின் மூலம் (உதாரணமாக) 52 பவுன் ஸ்டெர்லிங்குகள் ஆண்டு ஊதியம் பெறுகின்ற தொழிலாளிக்கு ஒரு சவரன் நாணயத்தின் மூலம் ஊதியமளிக்க முடியும்.

மார்க்ஸ் ஒரு முக்கியமான பொருளாதார முறைமையை விளக்கினார்: பண்ட-பணச் சுழற்சியும் கடன் முறையும் நன்கு வளர்ச்சியடைந்திருக்கின்ற நாடுகளில் அதே அளவு வருடாந்தரக் கூலியைக் கொடுப்பதற்குப்

புழக்கத்திலுள்ள சற்றுக் குறைவான பணத்தின் அளவு இன்றியமையாதது. இங்கிலாந்திலும் வேல்சிலும் 1842 மற்றும் 1862இல் புழக்கத்திலிருந்த பணம், பத்திரங்களின் அளவை ஒப்பிட்டு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் மதிப்பும் அளவும் தீவிரமாக அதிகரித்த போதிலும் புழக்கத்திலிருந்த பணத்தின் மொத்த அளவு ஒரே மாதிரியாகவே இருந்தது என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். இந்த ஆதாரத்தைக் கொண்டு அவர் தத்துவ ரீதியில் முக்கியமான பொதுமைப்படுத்தலைச் செய்தார்: ''...பண்டங்களின் மதிப்பு மட்டுமல்லாமல், பொதுவாகப் பணப் பேரங்களும் பிரம்மாண்டமாகப் பெருகிக் கொண்டிருக்கும் போது நாணயத் தொகை மேலும் மேலும் சுருங்கிக் கொண்டு வருவதை நீங்கள் காணலாம்.''*

இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் கடன் மற்றும் வங்கி அமைப்பு (வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள், ஓய்வூதிய நிதிகள் மற்றும் இதரவை) பிரம்மாண்டமாக வளர்ச்சியடைந்திருப்பதன் விளைவாக மார்க்ஸ் சுட்டிக் காட்டிய போக்கு இன்னும் கூடுதலாக வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். மேலும் காசோலைகள் மற்றும் இதர வங்கி அனுப்பாணைகள் மூலம் செய்யப்படுகின்ற வழங்கீடுகள் மிகவும் அதிகரித்திருக்கின்றன.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 73.

புழக்கத்தில் இருக்கின்ற பணத்தின் அளவு மாறாதது என்னும் கருத்து தத்துவ ரீதியில் தவறாக இருப்பதுடன் அன்றாட வாழ்க்கை யுடன் முற்றிலும் முரண்படுகிறது என்னும் உண்மையை மார்க்ஸ் வலியுறுத்துகிறார். எல்லா நாடுகளிலும் புழக்கத்திலிருந்த பண்டங்களின் மதிப்பும் அளவும், பண நடவடிக்கைகளின் அளவும் நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கின்றன என்பதே மெய்யாகும். கடன் உறவுகளும்—வெளியிடப்பட்ட வங்கிப் பத்திரங்கள், ரொக்கப் பணம் இல்லாமல் (உண்டிகள், காசோலைகள் மற்றும் இதரவற்றின் மூலம்) செய்யப்படுகின்ற வழங்கீடுகளின் அளவும் — நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கின்றன. மேற்கூறிய காரணங்களினால் மாறாத பண அளவைப் பற்றிய கருத்துரை ''மாபெரும் தவறு'' என்று மார்க்ஸ் கூறினார்.

குறைந்தபட்சக் கூலி அளவு மாறாதது என்னும் பூர்ஷ்வாத் தத்துவம் பொய்யானது என்று சுட்டிக் காட்டிய மார்க்ஸ் பின்வரும் அடிப்படையான உண்மைகளைக் கண்டு பிடித்துக் கொடுத்ததன் மூலம் தொழிலாளர்களை வலுப்படுத்தினார்:

—தேசிய உற்பத்திப் பொருளின் மொத்த அளவின் நிலையான தன்மையுடன் (ஆனால் மொத்த அளவு அதிகரிப்பதே குறியடையாளமாகும்) அல்லது புழக்கத்திலிருக்கின்ற பணத்தின் மாறாத அளவுடன் இணைக்கப் பட்டிருக்கின்ற தொழிலாளி வர்க்கத்தின்

உண்மையான கூலியின் அதிகரிப்புக்கு முடிவான எல்லை என்பது கிடையாது;

—தேசிய உற்பத்திப் பொருளின் அளவு நிலையாக இருக்கின்ற பொழுது கூட, முதலாளிகளின் லாபத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர்களின் கூலியின் அளவு சார்பு நிலையில் அதிகரிப்பதற்கு மெய்யான சாத்தியம் இருக்கிறது;

—தொழிலாளர்களுடைய வருமான மட்டத்தைக் குறைப்பதற்கு முதலாளிகளின் எல்லா நடவடிக்கைகளையும் எதிர்த்தும் தங்களுடைய உண்மையான கூலிகளை அதிகப்படுத்துவதற்கும் தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டங்கள் நியாயமானவை.

## கூலி உயர்த்தப்படும் பொழுது விலைகள் ஏன் நேரடியாக அதிகரிப்பதில்லை?

தொழிலாளர்களுடைய கூலி உயர்கின்ற பொழுது இன்றியமையாத பொருட்களின் விலைகள் நிச்சயமாக அதிகரிக்கும் என்று பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் அடிக்கடி கூறுவதை மார்க்ஸ் கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கையில் அதிகமான அக்கறையுடன் விமர்சனம் செய்தார். அவருடைய விமர்சனம் இன்றும் கூட அதிகமான பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது. இன்று முதலாளிகளும் முதலாளித்துவ அரசுகளும் கூலி உயர்வு ''பணவீக்கச் சுழலேணியை'' ஏற்படுத்தும் என்று கூறுகிறார்கள். முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்களின் பிற்போக்கான தலைவர்கள், அரசுப் பிரமுகர்கள் மற்றும் பொருளியலாளர்கள் பலர் இக்கொள்கையை நிரூபிப்பதற்கும் நியாயப்படுத்துவதற்கும் முயல்கிறார்கள்.

''பணவீக்கச் சுழலேணி'' என்னும் கருத்தின்படி தொழிலாளர்களுடைய கூலி உயர்கின்ற பொழுது உற்பத்திச் செலவும் பண்டங்களின் மதிப்பும் அதிகரிக்கும்; எனவே குறிப்பிட்ட தொழில்துறையிலும் அதன் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற தொழில்துறைகளிலும் விலைகள் நிச்சயமாக

அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது. முடிவாகப் பார்க்கும் பொழுது இதன் விளைவாக விலைகள் பொதுவில் அதிகரிக்கின்றன, பணவீக்கம் ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. விலைகள் அதிகரிக்கின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் மேலும் கூலி உயர்வுக்குப் போராடுகிறது; அது மறுபடியும் விலைகளை அதிகப்படுத்துகிறது. ஆகவே கூலியும் விலையும் சுழலேணியில் வளர்ச்சி அடைகின்றன என்று சொல்லப்படுகிறது.

''பணவீக்கச் சுழலேணிக்'' கருத்து தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் குறைவதற்கு முழுப் பொறுப்பையும் தொழிலாளி வர்க்கத்தின் மீது சுமத்துகிறது என்பதைப் பார்க்க முடியும். தொழிலாளி வர்க்கம் கூலி உயர்வுக்கு நடத்துகின்ற போராட்டமே பணவீக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணம் என்று வலியுறுத்தப்படுகிறது. பூர்ஷ்வாத் தத்துவாசிரியர்கள் தொழிலாளர்கள் தங்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்குச் செய்கின்ற எல்லா முயற்சிகளையும் கைவிட வேண்டுமென்று தொழிலாளர்களை நம்பும்படி செய்வதற்குப் பாடுபடுகிறார்கள்; அதே சமயத்தில் அவர்கள் உழைக்கும் மக்களின் இதர பகுதியினரைத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடுவதற்கு முயல்கிறார்கள்.

உதாரணமாக, கிரேட் பிரிட்டனில் ''பணவீக்கச் சுழலேணிக்'' கருத்தை ஆதரிப்

பவர்களான ஆர்தர் பிகூ மற்றும் ராய் ஹேறராடு, விலைகளின் உயர்வும் பணத்தின் மதிப்புக் குறைவும் என்னும் நிகழ்வுப் போக்கு ஒரு ''நச்சுச் சுழலின்'' தன்மையை (கூலிகள்—உற்பத்திச் செலவுகள்—விலைகள்—கூலிகள்) அடைந்து வருகிறது, அதன் வளர்ச்சி மேன்மேலும் விரிவடைகின்ற சுழலேணியை நினைவுபடுத்துகிறது என்று கூறுகிறார்கள். கூலி உயர்வு பணவீக்க நிகழ்வுப் போக்கின் ஆரம்ப நிலையாக இருப்பது மட்டுமன்றி அதை விரைவுபடுத்துகிறது, அதன் மூலம் அதிகமான தேவை ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

உற்பத்திச் செலவுகள் உயர்வதற்கு உண்மையாகவே தொழிலாளி வர்க்கத்தைப் பொறுப்பாக்கலாமா? கூலி உயர்வு தவிர்க்க முடியாதபடி விலைகளை அதிகப்படுத்துகிறதா?

மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் இக்கேள்விகளுக்கு நுணுக்கமான, விஞ்ஞான ரீதியான பதிலை அளித்தார். பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் கூலிகள், முதலாளிகளுடைய லாபம், பண்டங்களின் விலைகள் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள மெய்யான உறவுகளை எப்படித் திரித்துக் கூறுகிறார்கள் என்பதை அதன் மூலம் மார்க்ஸ் வெளிக்காட்டினார்.

முதலாவதாக, மார்க்ஸ் ''உற்பத்தி, கூலி, லாபம்'' என்னும் இரண்டாவது பிரிவில் கூலி உயர்வின் விளைவாக எல்லாப் பண்டங்களின் விலைகளும் அதிகரிக்கும் என்னும் கூற்

றைக் கடுமையாக விமர்சனம் செய்கிறார். உண்மை என்னவென்றால் கூலி உயர்வு— தொழிலாளர்களின் வருமானம் எப்பொருட்களுக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து — பல்வேறு பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும்.

உதாரணமாக, உபரிக் கூலி முன்பு வாங்கப்பட்டு வந்த நுகர்வுப் பொருட்களை இன்னும் அதிகமான அளவில் வாங்குவதற்குச் செலவழிக்கப்படலாம். அப்படியானால் கூலி உயர்வின் விளைவாகக் குறிப்பிட்ட இன்றியமையாத பொருட்களின் தேவை அதிகரித்து அப்பொருட்களின் சந்தை விலைகள் அதிகரிக்கலாம். தற்காலிகமாக லாப விகிதத்தை அதிகப்படுத்துவதற்கு முதலாளிகள் மத்தியில் சுதந்திரப் போட்டி தீவிரமாக நடைபெறுகிறது, குறைவான லாபம் கிடைக்கின்ற பொருளாதாரத் துறைகளிலிருந்து அதிகமான லாபம் கிடைக்கின்ற துறைகளுக்கு மூலதனம் மாற்றப்படுகிறது. முடிவில் எல்லாத் துறைகளிலும் லாப விகிதம் ஒரே மாதிரியாக இருக்கும். எத்தகைய கட்டுப்பாடும் இல்லாத சுதந்திரப் போட்டி நிலைமைகளில் சந்தை விலைகள் சில ஏற்ற இறக்கங்களுக்குப் பிறகு தமது முந்திய மட்டத்தில் நிலையாக இருக்கின்றன.

தொழிலாளர்கள் தங்களுடைய உபரி ஊதியத்தை தாங்கள் அதுவரை வாங்காத பொருட்களை வாங்குவதற்குச் செலவிடுவதும் உண்டு. அப்படியானால் பண்டங்களுக்

கான மொத்தத் தேவை அதிகரிப்பதில்லை, அத்தேவையின் உட்பகுதிகள் மாறுகின்றன. பாட்டாளி வர்க்கத்தின் தரப்பில் தேவை அதிகரிப்பதை முதலாளி வர்க்கத்தின் தரப் பில் தேவை குறைவது ஈடு செய்கிறது. மொத்தத் தேவை மாறாமல் இருக்கின்ற படியால் சந்தை விலைகளில் எவ்விதமான மாற்றமும் ஏற்பட முடியாது.

மேற்கூறிய இரண்டு உதாரணங்களிலும் தொழிலாளர்களின் கூலி உயர்வினால் ஏற் படுகின்ற பொதுப் பொருளாதார விளைவை மார்க்ஸ் வரையறுத்துக் கூறினார்: ''கூலி விகிதத்தின் பொதுவான உயர்வு இறுதியாக லாப விகிதத்தின் பொதுவான வீழ்ச்சியில் போய் முடியுமே தவிர வேறல்ல.''*

மார்க்ஸ் கிரேட் பிரிட்டனில் 1849க்கும் 1859க்கும் இடையிலுள்ள காலகட்டத்தில் தொழிலாளர் கூலி உயர்வுகளைக் குறிப் பிட்டுத் தன்னுடைய தத்துவ ஆய்வுரையை மறுக்க முடியாத மெய்விவரங்களுடன் நிரு பித்தார். இக்காலகட்டத்தில் வேலை நேரம் குறைந்தது, பாக்டரித் தொழிலாளர்களின் கூலிகள் உயர்ந்தன, அவர்களுடைய எண் ணிக்கை அதிகரித்தது, தொழிலாளர் உழைப் பின் உற்பத்தித் திறன் வேகமாக அதிகரித் தது, தொழிற்சாலையில் தயாரிக்கப்படு கின்ற பொருட்களின் விலைகள் குறைந்தன.

அதே சமயத்தில், விவசாயத் தொழிலா

---

* அதே நூல், பக்கம் 60.

ளர்களின் கூலிகள் பொதுவாக உயர்ந்தன. கிரேட் பிரிட்டனில் 1849—1859 காலகட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுடைய சராசரிக் கூலி விகிதம் சுமார் 40 சதவிகிதம் அதிகரித்தது. பல பாதகமான சந்தர்ப்பங்கள் (புதிய வரிகள், விவசாயத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மாபெரும் அளவில் அழிக்கப்படுதல் மற்றும் சில மோசமான அறுவடைகள்) இருந்தாலும் இங்கிலாந்தின் முக்கியமான விவசாய உற்பத்தியான கோதுமையின் சராசரி விலை அந்த சமயத்தில் 16 சதவிகிதம் குறைந்தது.

மார்க்ஸ் ''கூலியும் விலைகளும்'' என்னும் ஐந்தாவது பிரிவில் வெவ்வேறு நாடுகளில் தொழிலாளர்களின் கூலிகளையும் பண்டங்களின் விலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து முக்கியமான முடிவுகளுக்கு வருகிறார். இங்கிலாந்தின் பாக்டரி தொழிலாளர்கள் இயந்திரங்களைப் பயன்படுத்திய காரணத்தால் அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாக இருந்தது. ஆகவே அவர்கள் ஒப்புநோக்கில் அதிகமான கூலி பெற்றார்கள். எனினும் அவர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் மற்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் உற்பத்தி செய்த அதே பொருட்களைக் காட்டிலும் மலிவாக விற்பனை செய்யப்பட்டன. மார்க்ஸ் பின்வரும் விதியை உருவாக்கினார்: ''...சராசரியில் உயர்ந்த விலை உழைப்பு குறைந்த விலைப் பண்டங்களையும், குறைந்த விலை உழைப்பு

உயர்ந்த விலைப் பண்டங்களையும் உற்பத்தி செய்கிறது....''*

மார்க்ஸ் பிற்காலத்தில் மூலதனம் நூலின் முதல் தொகுதியில் இதன் காரணங்களை விளக்கினார். நுட்பத் திறனுள்ள இயந்திரங்கள் மற்றும் தேர்ச்சியுள்ள, ஆகவே அதிகமான கூலி பெறுகின்ற தொழிலாளர்களைப் பயன்படுத்துதலின் விளைவாக உற்பத்தி (கூலி உயர்வைக் காட்டிலும்) அதிகமாக இருப்பதால் தனிப்பொருளின் விலை குறைகிறது.

மார்க்ஸ் கூலி மட்டத்துக்கும் பண்டங்களின் விலைகளுக்கும் இடையிலுள்ள விகிதத்தை நிர்ணயிக்கின்ற நியதிகளை வெளிப்படுத்தினார்; அவை பொதுவில் முதலாளித்துவத்தின் குறியடையாளமாகும். முதலாளிகள் சுதந்திரமான போட்டியில் ஈடுபட்ட காலகட்டத்தில், அதாவது 19ஆம் நூற்றாண்டின் கடைசி வரை இந்த நியதிகள் நேரடியாகவும் உடனடியாகவும் வெளிப்பட்டன. ஆனால் 20ஆம் நூற்றாண்டில், ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் ஏகபோகங்கள் பொருளாதாரத்தில் ஆதிக்கமான சக்தியாக மாறிய பிறகு விலை உருவாக்கம் கணிசமாக மாறிவிட்டது.

மார்க்சின் போதனை மற்றும் புரட்சிகரப் பணியைத் தொடர்ந்த லெனின் ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் என்னும்

---

* அதே நூல், பக்கம் 78.

நூலில் ஏகாதிபத்திய அரசுகளின் பொருளாதாரங்களின் தனித்தன்மைகளை ஆழமாக ஆராய்ந்தார். சுதந்திரமான போட்டிக்கு பதிலாக ஏகபோகங்களின் ஆதிக்கம் ஏற்பட்டிருப்பதன் விளைவாக முதலாளிகளின் சக்திமிக்க இணையங்கள் ஏற்பட்டு அவை உற்பத்தியின் அதிகப் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொள்கின்றன, சரக்குகளின் விற்பனையை எடுத்துக் கொள்கின்றன; அவற்றை ஏகபோக (அதிகமான) விலைகளுக்கு விற்பனை செய்து பேரளவான அமித லாபங்களை அடைகின்றன என்று அவர் எடுத்துக்காட்டினார். பணவீக்கத்துக்கு ஏகபோகங்களே முக்கியமான காரணம்.

*1929—1933*ஆம் ஆண்டுகளின் மாபெரும் பொருளாதார மந்தத்துக்குப் பிறகு பூர்ஷ்வா அரசு பொருளாதாரத்தில் தீவிரமாகத் தலையிடத் தொடங்கியதன் விளைவாக அரசு ஏகபோக முதலாளித்துவம் உருவாயிற்று, அரசு மற்றும் ஏகபோக சக்திகள் பெரிய மூலதனத்தின் நலன்களுக்குப் பாடுபடுகின்ற, ஒற்றைப் பொருளாதாரப் பொறியமைவாக ஒன்றுபட்டன. ஏகாதிபத்திய அரசுகளின் ஆயுதப் போட்டி, அரசுகளின் வரவு செலவுத் திட்டங்களில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைகின்ற பற்றாக்குறை மற்றும் இதர காரணங்கள் 1970க்களிலும் 1980க்களிலும் பணவீக்கத்தை நிரந்தரமான நிகழ்வாக, பொருளாதாரத்தைச் சீர்குலைக்கின்ற காரணியாக மாற்றின. பணவீக்கத்தின்

விளைவாக மக்கள்தொகையின் எல்லாப் பிரி வினருடைய வாழ்க்கைத் தரங்களும் தொடர்ச் சியாகக் குறைகின்றன. இத்தகைய நிலைமை களில் பூர்ஷ்வா அரசும் ஏகபோக முதலாளித் துவமும் ''கூலி முடக்கக்'' கொள்கையைப் பின்பற்றி பணவீக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய எல்லாச் சுமைகளையும் தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர உழைக் கும் மக்களின் மீது சுமத்துவதற்கு மாபெ ரும் முயற்சியைச் செய்கின்றன. அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல தொழில்துறைகள் மற்றும் நிறுவனங் களில் 1983—1985ஆம் ஆண்டுகளில் தொழி லாளர்கள் மற்றும் அலுவலர்களின் ஊதிய உயர்வுகள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட் டன.

மார்க்சின் பொருளாதாரத் தத்துவம் மற் றும் ஏகாதிபத்தியத்தையும் அரசு ஏகபோக முதலாளித்துவத்தையும் பற்றிய லெனினு டைய தத்துவம் மட்டுமே இன்றைய ''கூலி முடக்கக்'' கொள்கையின் உண்மையான முக் கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு உதவுகின்றன. தொழிலாளர்களின் கூலி உயர்வு விலைகளை அதிகப்படுத்தாம லிருக்க. வேண்டுமென்றால் இது இன்றியமை யாதது என்று ஏகபோக முதலாளித்துவத் தின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். அது உண்மையல்ல. ஆளும் வர்க்கமாகிய ஏக போக முதலாளி வர்க்கம் பணவீக்கத்தினால் தனக்கு எவ்விதமான இழப்பும் ஏற்படக் கூடா

தென்று விரும்புகிறது; விலைகள் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற எல்லாப் பாதகமான விளைவுகளுக்கும் தொழிலாளர்களே முழுக் காரணம் என்று காட்ட முயல்கிறது; எல்லாவற்றுக்கும் மேலே, பெரிய மூலதனம் பேராசை கொண்டு ஏகபோக அமித லாபங்களைத் தேடுகிறது. இவையே ''கூலி முடக்கக்'' கொள்கைக்கு அடிப்படையாகும்.

## உழைப்பளவு மதிப்புத் தத்துவம்

மார்க்ஸ் கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கையில் தன்னுடைய மெய்யான விஞ்ஞான பொருளாதாரத் தத்துவத்தை, முதலாளித்துவத்தை நியாயப்படுத்திய பூர்ஷ்வா மழுப்பல் அரசியல் பொருளாதாரத்துக்கு எதிராக வைத்தார். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படைகளின் குணாம்சங்களிலிருந்து தொடங்குகின்ற சிக்கலான தத்துவப் பிரச்சினைகளுக்கு அவர் பதில்களைக் கண்டுபிடிக்க வேண்டும், அவற்றை ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும். அவர் முதலில் பின்வரும் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டார்: ஒரு பண்டத்தின் மதிப்பு என்ன? அதை நிர்ணயிப்பது எது? இப்பிரச்சினைகளை விளக்குவது பணம், மூலதனம், கூலி, லாபம் மற்றும் இதர பொருளாதார நிகழ்வுகளின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதற்கு அவசியமாகும்.

முதலாவதாக, மார்க்ஸ் ''சப்ளையும் கிராக்கியும்'' என்னும் நான்காவது பிரிவில் கொச்சையான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின்* வீணான தன்மையை அம்

---

* கொச்சையான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் நேரடியாகப் பார்க்கின்ற

பலப்படுத்தினார். அத்தத்துவம் பண்டங்களின் மதிப்பை சப்ளை மற்றும் கிராக்கி விதியின் மூலம் விளக்குவதற்குப் பயனில்லாத முயற்சியைச் செய்து கொண்டிருந்தது. விற்பனையாளர்கள் சப்ளை செய்வதைக் காட்டிலும் அப்பண்டத்தை வாங்குபவர்களின் தேவை அதிகமாக இருக்குமானால் விலைகள் அதிகரிக்கும் என்பது அறிந்ததே. மறு பக்கத்தில் தேவையைக் காட்டிலும் சப்ளை அதிகமாக இருக்குமானால் விலைகள் குறையும்.

மார்க்ஸ் வேறொரு சந்தர்ப்பத்தைச் சுட்டிக் காட்டினார். பண்டங்களின் சப்ளை தேவையுடன் பொருந்துகின்ற பொழுது இரண்டு எதிர்ச் சக்திகளும் சமமாக இருக்கின்றன. அவை ஒன்றையொன்று சரிக்கட்டுவதால் எத்திசையிலாவது செயல்படுவதை நிறுத்திக் கொள்கின்றன. இந்த உதாரணத்தின்படி ஒருபண்டத்தின் சந்தை விலை எதைக் குறிக்கிறது? சப்ளை மற்றும் தேவைத் தத்துவத்தை உபயோகித்து இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இக்கேள்விக்கு உழைப்பளவு மதிப்புத் தத்துவம் மட்டுமே சரியான பதிலைத் தர முடியும். குறிப்பிட்ட உதாரணத்தில் பண்டத்தின் சந்தை விலையே அதன் மெய்யான மதிப்பாகும். சப்ளை மற்

---

நிகழ்வுகளை அவற்றின் உள் சாராம்சமாகப் பிரதிநிதித்துவம் செய்கிறது; இந்த முறையின் மூலம் முதலாளித்துவ அமைப்பின் எல்லா அநீதிகளையும் நியாயப்படுத்தி நிலை நாட்டுகிறது.

றும் தேவையைப் பொறுத்தமட்டில் அவை மதிப்பிலிருந்து விலைகள் விலகுவதை, அதாவது மதிப்பைச் சுற்றி சந்தை விலைகளின் தற்காலிகமான ஊசலாட்டத்தை மட்டுமே பாதிக்கின்றன. ''ஒரு பண்டத்தின் மார்க்கெட் விலை அதன் மதிப்புக்கு மேலே ஏன் உயர்கிறது, அதன் மதிப்புக்குக் கீழே ஏன் குறைகிறது என்பதை வேண்டுமானால் அவை விளக்கலாம்; ஆனால் அந்த மதிப்பை அவற்றால் ஒருபோதும் விளக்க முடியாது'' என்று மார்க்ஸ் கூறினார்.*

அறிக்கையில் ''மதிப்பும் உழைப்பும்'' என்னும் ஆறாவது பிரிவில் மார்க்ஸ் மதிப்புத் தத்துவத்தின் பிரதான உள்ளடக்கத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறார். பொருளாதார நிகழ்வுகளைப் பற்றி உண்மையிலேயே விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர் இப்பகுதியில் எடுத்துக்காட்டுகிறார். அந்த நிகழ்வுகளை எளிமையான முறையில் கவனிப்பதிலிருந்து அவற்றின் உள் இயல்பையும் சாராம்சத்தையும் பொருளாதார நிகழ்வுப் போக்குகளை ஒழுங்குபடுத்துகின்ற புறவயமான விதிகளையும் விளக்குவதை நோக்கி முன்னேற வேண்டும்.

உதாரணமாக, சந்தையில் பண்டங்கள் பரிவர்த்தனை செய்யப்படுவதை உற்று நோக்கினால் பின்வருவனவற்றை கவனிக்க

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 77.

இயலும். மனிதர்கள் பல்வேறு பொருட்களைப் பரிவர்த்தனை செய்து அவற்றைக் குறிப்பிட்ட அளவு விகிதாச்சாரங்களில் ஒன்றுக்கொன்று சமமாக்குகிறார்கள். உதாரணமாக, கோதுமை குறிப்பிட்ட அளவுகளில் கால்நடை, பட்டுத்துணி, தங்கம் மற்றும் பல பொருட்களுக்குச் சமமாகக் கருதப்படுகிறது. எல்லாப் பண்டங்களும் பொதுவான மற்றும் சமமான ஏதோ ஒன்றைக் கொண்டிருக்கின்றன என்பதை இப்பரிவர்த்தனை சிறந்த முறையில் நிரூபிக்கிறது. வெவ்வேறு பொருட்களின் இயற்கையான குணாம்சங்கள் இப்பொது அம்சமாக இருக்க முடியாது; ஏனென்றால் அவற்றை ஒன்றுக்கொன்று ஒப்பிட முடியாது. இங்கே மதிப்பு, எல்லாப் பண்டங்களிலும் இருக்கின்ற சமூக அம்சம் சம்பந்தப்பட்டிருக்கிறது.

பண்டங்களின் இந்த சமூக அம்சத்தின் சாராம்சத்தை வெளிப்படுத்துகின்ற பொழுது மார்க்ஸ் இங்கிலாந்தின் மூலச்சிறப்பான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தில்* உருவாக்கப்பட்ட உழைப்பளவு மதிப்புத் தத்து

---

* இங்கிலாந்தின் மூலச்சிறப்பான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் என்பது பூர்ஷ்வாப் பொருளாதார சிந்தனையில் விஞ்ஞான ரீதியான போக்கு ஆகும். இது முதலாளித்துவத்தின்கீழ் பொருளாதார உறவுகளை ஆராய்வதில் விஞ்ஞான ரீதியான அணுகுமுறையின் அடிப்படைகளை ஏற்படுத்தியது.

வத்தை வளர்த்துக் கூறினார். ஒரு பண்டத்தின் மதிப்பு அதற்குச் செலவிடப்பட்டிருக்கின்ற தொழிலாளர்களுடைய சமூக உழைப்பினால் நிர்ணயிக்கப்படுவதால் அது உழைப்பளவுத் தத்துவம் என்று சொல்லப்படுகிறது.

ஒரு பண்டத்தை உற்பத்தி செய்பவர் தனக்கென்று அதை உற்பத்தி செய்யவில்லை; அவர் மக்களுக்காக, சமூகத்தின் நுகர்வுக்காக அதை உற்பத்தி செய்கிறார். அவர் உற்பத்தி செய்கின்ற பண்டம் ஏதாவதொரு சமூகத் தேவையைப் பூர்த்தி செய்கிறது; ஆகவே அவருடைய உழைப்பு சமூகம் செலவிடுகின்ற மொத்த உழைப்பின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கிறது. மதிப்பு சமூக உழைப்பின் கெட்டிப்படுத்தப்பட்ட வடிவமாக இருக்கிறது. இக்கோணத்திலிருந்து பார்த்தால் பண்டங்கள் சமூக உழைப்பின் வெவ்வேறு அளவுகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன என்ற அளவில் மட்டுமே ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. மார்க்ஸ் ஓர் எளிமையான உதாரணத்தைச் சுட்டிக் காட்டினார்: ஒரு செங்கல்லைக் காட்டிலும் பட்டுக் கைக்குட்டையைத் தயாரிப்பதற்கு அதிகமான உழைப்பு செலவிடப்படக் கூடும்.

மார்க்சின் அறிக்கையில் எந்தப் பண்டத்திலும் இருக்கின்ற இரண்டு முக்கியமான குணாம்சங்கள் வர்ணிக்கப்படுகின்றன: 1) அதன் பயன்பாடு (பயன் மதிப்பு) மற்றும் 2) அதன் மதிப்பு. மதிப்பின் சாராம்சத்தையும் அதன் சமூக இயல்பையும் விளக்கு

வதற்கு மார்க்ஸ் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை முரணில்லாமல் கையாண்டார்.

இங்கிலாந்தின் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் தலைவர்களான ஆடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோ ஒரு பண்டத்தின் மதிப்பு அப்பண்டத்தை உற்பத்தி செய்தவருடைய உழைப்பினால் ஏற்படுகிறது என்று அங்கீகரித்தனர்; ஆனால் அவர்கள் அதற்கு மேல் சிறிதளவு கூடப் போகவில்லை. எந்த உழைப்பு இந்த மதிப்பை உருவாக்குகிறது என்னும் ஆழமான, சிக்கலான கேள்விக்கு அவர்களால் பதிலளிக்க இயலவில்லை. ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு குறிப்பிட்ட ரகத்தைச் சேர்ந்த பொருளைத் தயாரிக்கிறார். உதாரணமாக, ஒரு கடிகாரத்தைச் செய்கின்ற உழைப்பு தனித்தன்மையைக் கொண்டிருக்கிறது; அது உழைப்பின் மற்ற ரகங்களிலிருந்து (உதாரணமாக, ஒரு கலப்பையைத் தயாரிக்கின்ற உழைப்பிலிருந்து) கணிசமாக வேறுபடுகிறது. உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தின் அடிப்படையான பிரச்சினை பண்ட உற்பத்தியாளருடைய உழைப்பின் தன்மையைப் பற்றிய பிரச்சினையே. அரசியல் பொருளாதார வரலாற்றில் முதல் தடவையாக மார்க்ஸ் இக்கேள்விக்குத் தேர்ந்தாராய்ந்த பதிலை அளித்தார்.

மார்க்ஸ் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தில் சாராம்சத்தில் புதிதாக எதை அறிமுகம் செய்தார் என்பதை இந்த அறிக்கையில் முழு

மையாக வெளியிடவில்லை; அறிக்கையின் நோக்கங்களுக்கு அது அவசியமல்ல என்பது மெய்யே. அதே சமயத்தில், இந்த அறிக்கையைப் படிக்கின்ற எவரும் மார்க்ஸ் மூலதனம் நூலின் முதல் தொகுதியில் 1—3 அத்தியாயங்களில் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை முழுமையாக விளக்கியிருக்கிறார் என்பதை மனதிலிறுத்த வேண்டும். பண்ட உற்பத்தியாளருடைய உழைப்பின் இரட்டைத் தன்மையைப் பற்றிய அவருடைய தத்துவம் இங்கே முழுமையாக விளக்கப்படுகிறது. அத்தத்துவம் விஞ்ஞான ரீதியான அரசியல் பொருளாதாரத்தின் ஆரம்ப நிலையாக இருந்தது.

அத்தத்துவத்தை இங்கே சுருக்கமாக எடுத்துக் கூறுவோம். பண்டத்தை உற்பத்தி செய்கின்ற தொழிலாளியின் உழைப்பு இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். முதலாவதாக அது திட்டவட்டமான வடிவத்தில் செலவிடப்படுகின்ற ஸ்தூலமான உழைப்பாகும். துல்லியமாக அது அந்தப் பண்டத்துக்கு எல்லா அவசியமான குணாம்சங்களையும் அளிக்கிறது, பயன் மதிப்பை, மக்களுடைய குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஆற்றலைத் தருகிறது. அதே சமயத்தில், பண்ட உற்பத்தியாளர்கள் அனைவருடைய உழைப்பும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொதுவான உடலியல் மற்றும் உளவியல் சக்திகளைப் பிரதிநிதித்

துவம் செய்கின்ற அம்சத்தைப் பகிர்ந்து கொள்கிறது. இந்த [சூக்குமமான மனித உழைப்பு (அதன் ஸ்தூலமான தனித்தன்மை முக்கியமல்ல) பண்டத்துக்கு மதிப்பை அளிக்கிறது. சூக்குமமான உழைப்பினால் மட்டுமே எல்லாப் பண்டங்களையும் அளப்பதற்கும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துவதற்கும் இயல்கிறது.

மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் ஒரு பண்டத்தின் மதிப்பின் குண ரீதியான தனித்தன்மைகளையும் பண்டத்தைப் படைக்கின்ற உழைப்பின் தனித்தன்மைகளையும் விளக்குகின்ற பொழுது ஒரு முக்கியமான கேள்விக்கு பதிலளித்தார்: உழைப்பின் அளவு எதன் மூலம் அளக்கப்படுகிறது? அந்த அளவுகோல் உழைப்பு நீடிக்கும் நேரம் (உழைப்பு நேரம்) ஆகும்; அது மணி, நாள் மற்றும் இதரவையினால் குறிக்கப்படுகிறது. உழைப்புக்கு இந்த அளவுகோலைப் பயன்படுத்துவதற்கு உழைப்பின் எல்லா வடிவங்களும் சராசரி அல்லது சாதாரண (தேர்ச்சியற்ற) உழைப்பாக வகைப்படுத்தப்பட வேண்டும்.

உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தின் முக்கியமான கருத்துரைகள் ஒரு பண்டத்தின் மதிப்பின் அளவுக்கும் அதைத் தயாரிப்பதில் செலவிடப்பட்ட உழைப்பின் அளவுக்கும் இடையிலுள்ள இணைப்பை நிறுவுகின்ற முக்கியமான முடிவை மார்க்ஸ் செய்வதற்கு உதவின. ஒரு பண்டத்தின் மதிப்பின் அளவு அதிலடங்கியிருக்கின்ற சமூக உழைப்பின் அள

வைப் பொறுத்திருக்கிறது. அதாவது, அப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் சார்பான அளவைப் பொறுத்திருக்கிறது.

இம்முடிவு மார்க்ஸ் பண்டப் பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துகின்ற புறவயமான பொருளாதார விதியாகிய மதிப்பின் விதியை நிர்ணயிப்பதற்கு உதவியது. ஒரு பக்கத்தில், ஒவ்வொரு பண்ட உற்பத்தியாளரும் சந்தையில் விற்பனை செய்யப்படக் கூடிய, உபயோகமுள்ள பொருளைத் தயாரிக்கிறார், அதன் தயாரிப்பில் ஒருவகையான தனிப்பட்ட உழைப்பு நேரத்தைச் செலவிடுகிறார் என்பதை மார்க்ஸ் நிறுவினார். ஒரு நபர் எவ்வளவு மெதுவாக வேலை செய்கிறாரோ, எவ்வளவு நுட்பத்திறன் இல்லாதவராக இருக்கிறாரோ, அந்த அளவுக்கு அவர் தயாரிக்கின்ற பண்டத்தின் மதிப்பு அதிகமாக இருக்கும் என்று சொல்லலாம்; ஏனென்றால் அப் பண்டத்தைத் தயாரிப்பதற்கு அந்த அளவுக்கு அதிகமான நேரத்தை அவர் எடுத்துக் கொள்கிறார். ஆனால் மறு பக்கத்தில், சமூகம்—சந்தையிலுள்ள வாங்குபவர்களும் விற்பனை செய்பவர்களும் அதைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்—வெவ்வேறு தொழிலாளர்கள் ஒரே ரகத்தைச் சேர்ந்த பொருளைத் தயாரிப்பதற்குச் செலவிடுகின்ற வெவ்வேறு உழைப்பு நேரங்களைப் பற்றி அக்கறை காட்டாது. சந்தையிலுள்ள பண்டங்களின் மதிப்பு அவற்றைத் தயாரிப்பதற்குச்

செலவிடப்பட்ட சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தின் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. மதிப்பு விதியின் உள்ளடக்கம் இதுவே. இவ்விதியை விளக்குகின்ற பொழுது மார்க்ஸ் பின்வருமாறு கூறினார்: ''ஒரு பண்டத்தின் மதிப்பு அதில் செலவழிக்கப்பட்டுள்ள அல்லது பருவடிவாக்கப்பட்டிருக்கிற உழைப்பின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறுகிற பொழுது, அதை நாம் எப்படி அர்த்தப்படுத்திக் கொள்கிறோம்? ஒரு குறிப்பிட்ட சமூக நிலையில், உற்பத்தியின் குறிப்பிட்ட சமூக சராசரி நிலைமைகளின் கீழ், ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் குறிப்பிட்ட சராசரி சமூக வேகத்தையும் குறிப்பிட்ட சராசரித் திறமையையும் கொண்டு ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய அவசியமான உழைப்பின் அளவு என்று தான் நாம் அர்த்தம் கொள்கிறோம்.''*

மார்க்ஸ் சுட்டிக் காட்டியதைப் போல குறிப்பிட்ட பண்டங்களின் தயாரிப்பிற்குச் செலவிடப்படுகின்ற உழைப்பின் அளவு அந்த உழைப்பின் உற்பத்தித் திறனைப் பொறுத்திருக்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமான பண்டம் குறிப்பிட்ட உழைப்பு நேரத்தில் உற்பத்தி செய்யப்படும்; ஆகவே உற்பத்தியின் ஓர் அலகின் மதிப்பு

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 89.

அதற்கேற்பக் குறைந்து விடுகிறது. மறு பக்கத்தில், உற்பத்தித் திறன் எவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு குறைவான பண்டம் குறிப்பிட்ட கால அலகில் உற்பத்தி செய்யப்படும்; அதற்கேற்ப உற்பத்தி அலகின் மதிப்பு கூடுதலாக இருக்கும். உழைப்பின் உற்பத்தித் திறன் பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மாறுகிறது: அ) பல்வேறு தொழிலாளர்களின் இயற்கையான தனித்தன்மைகள் மற்றும் சேகரிக்கப்பட்ட உற்பத்தித் திறமை; ஆ) உழைப்பின் இயற்கையான நிலைமைகள் (மண்வளம், சுரங்கத்தின் பெருவளம், இதரவை); இ) உழைப்பின் ஒழுங்கமைப்பை மேன்மேலும் சீராக்குதல் (பெரிய அளவு உற்பத்தி, உழைப்புப் பிரிவினை, உழைப்பை ஒன்றிணைத்தல், உற்பத்தி முறைகளை அபிவிருத்தி செய்தல், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப சாதனைகளை அமுலாக்குதல், இதரவை).

18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் இயந்திரங்களும் தொழில்நுட்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டதிலிருந்து தொழிலாளர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறன் கையினால் வேலை செய்த பொழுது இருந்ததைக் காட்டிலும் பன்மடங்காகப் பெருகி அதிகமான பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்பது இயற்கையே. ஒரு கைத்தறி நெசவாளி ஒரு மீட்டர் துணியை நெய்வதற்கு ஐந்து மணி

நேரம் வேலை செய்கிறார் என்று வைத்துக் கொண்டால் இயந்திரத் தறிகள் மற்றும் தானியங்கித் தறிகள் பயன்படுத்தப்பட்ட பிறகு ஒரு மீட்டர் துணியை நெய்வதற்கு அவசியமான நேரம் பன்மடங்கு நூற்றுக் கணக்கான மடங்கு கூட—குறைந்து விட்டது. தொழில்துறையில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமைகளின் குணாம்சமான இந்த உழைப்பு நேரம் சமூக ரீதியில் அவசியமானதாக, சமூகத்தின் நோக்கில் சகஜமானதாக இருக்கிறது.

ஒரு பண்டத்தின் மதிப்பு சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தின் அளவு மற்றும் உழைப்பின் உற்பத்தித் திறனைப் பொறுத்திருப்பதைப் பற்றித் தன்னுடைய ஆராய்ச்சியைத் தொகுத்துரைக்கின்ற பொழுது மார்க்ஸ் பண்ட உற்பத்தியின் பொதுவான பொருளாதார விதியை அறிக்கையில் சுட்டிக் காட்டினார்: ''பண்டங்களின் மதிப்புகள் அவற்றின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் நேரங்களுக்கு நேர் விகிதத்திலிருக்கும், ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் உற்பத்தித் திறன்களுக்கு எதிர் விகிதத்திலிருக்கும்.''* இந்த விதியைப் புரிந்து கொள்வது குறிப்பாக, மதிப்பின் அளவு, கூலிகள், லாப விகிதம், இதரவற்றின் மாற்றங்களைத் தெரிந்து கொள்வதற்கு முக்கியமாகும்.

மதிப்பின் மெய்யான சாராம்சத்தைப் பற்

---

* அதே நூல், பக்கம் 92.

றிய விளக்கம் எந்தப் பண்டத்தின் விலையையும் நிர்ணயிப்பதற்கு அவசியமான அடிப்படையாக இருக்கிறது. விலை என்பது மதிப்பு அடைகின்ற வடிவம், அது துல்லியமாக மதிப்பின் பண வெளியீடு என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

மார்க்ஸ் இக்கருத்தை விளக்குவதற்குப் பணத்தைப் பற்றிய அகல்விரிவான தத்துவத்தை அடிப்படையாகக் கொள்கிறார். இத் தத்துவத்தை அவரே முதலில் உருவாக்கினார் (மூலதனம் நூலின் முதல் தொகுதியில் ''பண்டம்'' மற்றும் ''பணம் அல்லது பண்டங்களின் சுழற்சி'' என்னும் அத்தியாயங்களைக் காண்க*). அவர் பணத்தின் தோற்றம், சாராம்சம் மற்றும் பணிகளை விரித்துரைத்தார். இத்தத்துவத்தை விளக்குகின்ற பொழுது மார்க்ஸ், தங்கம் அல்லது வெள்ளியைப் போன்ற பணப் பண்டத்தின் மதிப்பு மற்ற எல்லாப் பண்டங்களின் மதிப்பையும் போலவே அவற்றை வெட்டியெடுப்பதற்கு அவசியமான உழைப்பின் அளவினால் நிர்ணயிக்கப்படுகிறது என்று சுட்டிக் காட்டினார். ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பையும் பணத்தின் மதிப்புடன் தொடர்புபடுத்துவதன் மூலம் எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் (அவற்றை உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்படுகின்ற உழைப்பின் அளவு) ஒரு

---

* K. Marx, *Capital*, vol. 1, pp. 43-76, 97-144 பார்க்க.

பணப் பண்டத்தின் மூலமாக வெளியிடப்படுகின்றன. பணத்தின் உதவியினால் எல்லாப் பண்டங்களின் மதிப்புகளும் சுயேச்சையான, ஒரே சீரான வடிவத்தைப் பெற்றன, சூக்குமமான சமூக உழைப்பின் அளவுகள் என்ற முறையில் அவை எடுத்துரைக்கப்படத் தொடங்கின என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டினார்.

மார்க்ஸ் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தைப் பற்றிய விளக்கத்தை முடிக்கின்றபொழுது மதிப்புக்கும் சந்தை விலைகளுக்கும் உள்ள விகிதத்தைப் பற்றிய மிகவும் முக்கியமான தத்துவப் பிரச்சினையை ஆராய்ந்தார். ஒரு ரகத்தைச் சேர்ந்த எல்லாப் பண்டங்களுக்கும் — அவற்றின் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் உற்பத்தி நிலைமைகள் எவ்வளவு வேறுபட்டிருந்தாலும்— சந்தை விலைகள் ஒன்றே என்னும் பிரபலமான உண்மையை அவர் சுட்டிக் காட்டுகிறார். எந்தப் பொருளையும் குறிப்பிட்ட அளவில் சந்தைக்கு அளிப்பதற்கு சராசரி உற்பத்தி நிலைமைகளில் அவசியமான சமூக உழைப்பின் சராசரி அளவை மட்டுமே சந்தை விலைகள் வெளியிடுகின்றன. ஒரு குறிப்பிட்ட ரகத்தைச் சேர்ந்த பண்டங்களின் மொத்த அளவின் மூலம் அவை மதிப்பிடப்படுகின்றன. இந்த உதாரணத்தில் பண்டத்தின் சந்தை விலை அதன் மதிப்புக்குச் சமமாக இருக்கிறது.

ஒரு பண்டத்தின் சப்ளை மற்றும் தேவை

யில் ஏற்ற இறக்கம் காரணமாக சந்தை விலைகளிலும் ஏற்ற இறக்கம் ஏற்படுகிறது. அவை அப்பண்டத்தின் மதிப்புக்கு மேலும் கீழும் ஊசலாடுகின்றன. அதே சமயத்தில், சப்ளையும் தேவையும் தொடர்ச்சியாக ஒன்றையொன்று சமப்படுத்திக் கொள்ள முயல்கின்றன; ஒரு மாற்றத்தை மற்றொரு மாற்றம், ஒரு ஏற்றத்தை மற்றொரு இறக்கம் ஈடு செய்கிறது; பின்னர் அதன் எதிர்மறை நடைபெறுகிறது. போதுமான அளவுக்கு நீண்டதொரு கால அளவில் விலைகளின் இயக்கத்தை நாம் ஆராய்ந்தால் பின்வருபவை தெளிவாகும்: சந்தை விலைகளின் ஊசலாட்டங்கள், பண்டங்களின் மதிப்புகளிலிருந்து அவற்றின் விலகல்கள், அவற்றின் ஏற்ற இறக்கங்கள் ஒன்றையொன்று பரஸ்பரம் சரிப்படுத்திக் கொண்டு ஈடு செய்கின்றன. இப்பிரச்சினையைப் பற்றி எழுதப்பட்டிருந்த பொருளாதார நூல்கள் எல்லாவற்றையும் ஆழமாக ஆராய்ந்த மார்க்ஸ் தன்னுடைய தத்துவக் கருத்துகளைத் துல்லியமான புள்ளிவிவரங்களின் உறுதியான அடிப்படை மீது அமைப்பதற்கு எப்பொழுதும் முயன்றார். குறிப்பாக, மதிப்புக்கும் சந்தை விலைகளுக்கும் உள்ள விகிதத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளில் மார்க்ஸ் ஆங்கிலப் பொருளியலாளர் தாமஸ் தூக் எழுதிய விலைகளின் வரலாறு என்னும் நூலில் தரப்பட்டிருந்த புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டார்.

அதன் விளைவாக மார்க்ஸ் பின்வரும் பொது முடிவைச் செய்தார்: "...ஓரளவு நீண்ட காலங்களை எடுத்துக் கொண்டு பேசும் போது, எல்லாவகையான பண்டங்களும் அவ்வவற்றின் மதிப்புகளுக்குச் சமமான விலையில் விற்கப்படுகின்றன...."* வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பண்ட உற்பத்தியில் மதிப்பின் விதி விலைகளின் விதியாகத் தோன்றுகிறது; ஏனென்றால் ஒன்றையொன்று ரத்துச் செய்கின்ற ஊசலாட்டங்கள் எப்படியிருந்தாலும் சமூக அளவில் மற்றும் நீண்ட கால அளவில் பண்டங்களின் விலைகள் அவற்றின் மதிப்புடன் அதாவது சமூக ரீதியில் அவசியமான உழைப்புடன் பொருந்துகின்றன என்பதை நிறுவினார்.

மார்க்ஸ் விரித்துக் கூறிய உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை ஆழமாகக் கற்றால் தான் நவீன பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் அதை உறுதியாக மறுப்பது அல்லது முழுமையாகப் புறக்கணிப்பது ஏன் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். உண்மை என்னவென்றால் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்திலிருந்து தோன்றுகின்ற புரட்சிகரமான முடிவுகள் எவ்விதமான சுரண்டல் மற்றும் புல்லுருவிச் சமூகத்துக்கும் எதிராக இருப்பதே காரணமாகும். ஒரு பண்டத்தின் மதிப்பு

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 95.

அதில் செலவிடப்பட்டிருக்கின்ற தொழிலாளியின் உழைப்பினால் ஏற்படுகிறது என்றால் அவர்களுடைய உழைப்பின் உற்பத்திப் பொருள் அதைத் தயாரிப்பதில் சிறிதும் பங்கெடுக்காத ஒருவருடைய நன்மைக்காக அவர்களிடமிருந்து பறிக்கப்படுவதை பொருளாதார ரீதியில் நியாயப்படுத்த முடியாது, அது ஒரு அநீதியாகும். இந்த முடிவு நேரடியாக முதலாளி வர்க்கம் மற்றும் இதர புல்லுருவி, சுரண்டுகின்ற வர்க்கங்களைத் தாக்குவது இயற்கையே. உழைப்பின் உற்பத்திப் பொருள் அதைப் படைக்கின்ற நபருக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்னும் முடிவை உழைப்பளவு மதிப்புத் தத்துவத்திலிருந்து நேரடியாகப் பெறுகிறோம்.

பண்டங்களின் மதிப்பு கூலியினால் நிர்ணயிக்கப்படுகிறதா? முன்னர் எழுப்பப்பட்ட இக்கேள்வியை மார்க்ஸ் மறுபடியும் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தின் நிலையிலிருந்து ஆராய்ந்தார்.

கூலி உழைப்பின் ஊதியம் மற்றும் செலவிடப்பட்ட உழைப்பின் அளவு என்பவை முற்றிலும் வெவ்வேறு இனங்கள் என்பதை மார்க்ஸ் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு நினைவுபடுத்தினார். சம மதிப்புடைய எந்த ரகத்தையும் சேர்ந்த இரண்டு பண்டங்களை — உதாரணமாக, ஒரு டன் கோதுமை மற்றும் ஒரு அவுன்ஸ் தங்கத்தை—ஒப்பிட்டால் அவை சராசரி உழைப்பின் சம அளவுகளின் பருவடிவங்களைப் பிரதிநிதித்துவம்

செய்கின்றன. கோதுமை மற்றும் தங்கத்தின் மதிப்பை இப்படி ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது விவசாயத் தொழிலாளர்கள் அல்லது சுரங்கத் தொழிலாளர்களின் கூலியின் உதவியை எவரும் நாடுவதில்லை. ஆகவே பின்வரும் கேள்விகளுக்கு விடை கிடைப்பதில்லை: கூலியுழைப்பு பொதுவில் உபயோகிக்கப்பட்டதா? விவசாயத் தொழிலாளி மற்றும் சுரங்கத் தொழிலாளியின் கூலிகள் சமமானவையா?

கூலியின் அளவுக்கும் பண்டத்தின் மதிப்புக்கும் இடையிலுள்ள விகிதத்தைப் பற்றிய பிரச்சினையை விளக்குகின்றபொழுது மார்க்ஸ் பின்வரும் மறுக்க முடியாத உண்மைகளை நிறுவினார்: கூலியின் அளவு இயற்கையாகவே பண்டத்தின் மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக இருக்க முடியாது, அதைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். ஒரு பொருளின் மதிப்பின் அளவினால் கூலி வரையறுக்கப்படுகிறது என்றால் பண்டத்தின் மதிப்பு கூலியினால் வரையறுக்கப்படவில்லை. மதிப்புகள், உதாரணமாக கோதுமை மற்றும் தங்கத்தின் சார்பு மதிப்புகள் கூலியிலிருந்து சுயேச்சையாக நிர்ணயிக்கப்படுகின்றன என்பதே மிகவும் முக்கியமானது என்று மார்க்ஸ் வலியுறுத்தினார். ஆகவே பண்டங்களின் மதிப்பை நிர்ணயிப்பதற்குக் கூலி ஓர் அளவுகோல் அல்ல. விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட இந்த முடிவு ''பணவீக்கச் சுழலே

ணித்'' தத்துவத்துக்கு உண்மையிலேயே ''மரண அடி'' கொடுக்கிறது.

மார்க்சின் உழைப்பளவு மதிப்புத் தத்துவம் மதிப்பையும் கூலியையும் பற்றிய பூர்ஷ்வாக் கருத்துகளுக்கு எதிரான மாபெரும் தத்துவ ஆயுதமாக இருக்கிறது என்பது இதன் பொருளாகும். அது கூலியின் விதியை வெளிப்படுத்தியது.

தொழிலாளர் கூலியின் விதி சாரம்சத்தில் சப்ளை மற்றும் தேவை விதியின்படி நிலவுகிறது, அதன்படி ஒவ்வொரு தொழிலாளியும் முதலாளியிடம் தன்னுடைய உழைப்பை விற்பனை செய்கிறார் என்று கொச்சையான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் நெடுங் காலமாகவே கூறி வந்திருக்கிறது. ஆனால் மார்க்ஸ் ''சப்ளையும் கிராக்கியும்'' என்னும் தலைப்பு கொண்ட தன்னுடைய அறிக்கையின் நான்காவது பிரிவில் சப்ளை மற்றும் தேவை விதி பண்டங்களின் விலைக்கோ, கூலியின் இயல்புக்கோ திறவுகோலைத் தரவில்லை என்பதை நிரூபித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பின்வரும் கேள்வியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று மார்க்ஸ் ஆலோசனை கூறினார்: குறிப்பிட்ட அளவு உழைப்புக்குக் குறிப்பிட்ட அளவு பணம் கொடுக்கப்படுவது ஏன்? அது சப்ளை மற்றும் தேவை விதியினால் நிர்ணயிக்கப்படுகிறது என்று இக்கேள்விக்கு பதிலளித்தால் மற்றொரு நியாயமான கேள்வி உடனடியாக எழுகிறது: சப்ளையும் தேவையும் எந்த விதியின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன? ஆனால் சப்ளையும் தேவையும் பற்றிய தத்துவம் இக்கேள்விக்கு எவ்விதத்திலும்

பொருத்தமான பதிலை அளிக்கக் கூடிய நிலையில் இல்லை. ஏனென்றால் ஒரு தொழிலாளி குறிப்பிட்ட அளவு உழைப்புக்குக் குறிப்பிட்ட அளவு பணத்தைப் பெறுவது ஏன் என்பதை சப்ளையும் தேவையும் தத்துவம் தன்னளவில் விளக்க முடியாது.

உழைப்புச் சந்தையில் சப்ளைக்கும் தேவைக்கும் இடையிலுள்ள விகிதம் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கிறது; இந்த மாற்றம் கூலியின் அளவின் மீது தாக்கம் செலுத்துகிறது. உழைப்புச் சக்தியின் தேவை அதன் சப்ளையைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் கூலி அதிகரிக்கிறது; உழைப்புச் சக்தியின் சப்ளை அதன் தேவையைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் தொழிலாளர்களுடைய கூலி குறைகிறது.

கூலியின் தற்காலிகமான ஏற்ற இறக்கங்கள் மட்டுமே உழைப்புச் சந்தையின் சப்ளை மற்றும் தேவையினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்க முடியும். ஆனால் அவற்றுக்கு இடையில் சமநிலை ஏற்பட்ட பிறகு தொழிலாளி கூலிக்குப் பரிவர்த்தனையாக விற்பனை செய்கின்ற பண்டத்தின் சந்தை விலை அதன் மெய்யான மதிப்புடன் பொருந்துகிறது.

ஆனால், தொழிலாளி கூலிக்குப் பரிவர்த்தனையாக விற்பனை செய்கின்ற பண்டம் எதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது? அதன் மதிப்பை நிர்ணயிப்பது எது? பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தினால் இக்கேள்வி

களுக்கு பதிலளிக்க முடியவில்லை. மார்க்ஸ் முதல் தடவையாக அவற்றுக்கு சரியான பதிலை அளித்தார்.

மார்க்ஸ் ''உழைக்கும் சக்தி'' என்னும் ஏழாவது பிரிவில் கூலியின் சாராம்சத்தைப் பற்றிய பிரச்சினை மீது ஒளி பாய்ச்சுகின்ற பொழுது ஒரு உண்மையை வலியுறுத்தினார். முதலாவது அகிலத்தின் பொதுக் கவுன்சில் கூட்டத்தில் பங்கெடுத்த தொழிலாளர்கள் எல்லோருமே அந்த உண்மைக்கு சாட்சிகளாக இருந்தார்கள். தொழிலாளி தன்னுடைய உழைப்பை நுகர்பவரிடம், அதாவது முதலாளியிடம் விற்பனை செய்கிறார் என்பதைப் பற்றி அங்கே எவருக்கும் சந்தேகம் கிடையாது. ஆனால் உழைப்பும் ஒரு பண்டமே. அந்தப் பண்டத்துக்கு ஒரு விலை இருக்க வேண்டும். விலை என்பது ஒரு பண்டத்தின் மதிப்பின் பண வெளியீடு மட்டுமே என்பதனால் பண்டம் என்ற முறையில் உழைப்புக்கு மதிப்பு இருக்க வேண்டும்.

ஆனால் உண்மையில் உழைப்பு என்று ஒரு பண்டம் இல்லை, அதற்கு மதிப்பு இல்லை என்று மார்க்ஸ் அக்கூட்டத்தில் பங்கெடுத்தவர்கள் அனைவரும் ஆச்சரியப்படத்தக்க முறையில் சுட்டிக் காட்டினார். இக்கருத்துக்கு அவசியமான ஆதாரங்கள் மூலதனம் நூலின் முதல் தொகுதியில் ''உழைப்புச் சக்தியின் மதிப்பு (மற்றும் விலை) கூலியாக மாற்றப்படுதல்'' என்னும் அத்தியாயத்தில் முழுமையாக வர்ணிக்கப்படுகின்றன. மார்க்ஸ்

தன்னுடைய அறிக்கையில் பின்வரும் மிகவும் தீர்மானமான வாதத்தைத் தருவதுடன் நிறுத்திக் கொண்டார்.

நாம் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை உபயோகித்து பத்து மணி வேலை நேரத்தின் மதிப்பை நிர்ணயிப்பதற்கு முயற்சிப்போம். இப்பத்து மணி நேரத்தில் எவ்வளவு உழைப்பு இருக்கிறது? பத்து மணி நேர உழைப்பு என்று பதிலளிப்பது இயற்கையே. எந்தப் பண்டத்தின் மதிப்பும் அதைத் தயாரிப்பதற்குச் செலவிடப்படுகின்ற உழைப்பு நேரத்தின் அளவினால் நிர்ணயிக்கப்படுவதால் பத்து மணி நேர உழைப்பின் மதிப்பு பத்து மணி நேர உழைப்புக்குச் சமமாக இருக்கும். ஒரு பொருளை நிர்ணயிப்பதற்கு அதையே பயன்படுத்துவது பொருளற்றதாகும்.

உழைப்புக்கு மதிப்பு இல்லை, மதிப்பு இருக்க முடியாது, அது ஒரு பண்டம் அல்ல என்பதை மார்க்ஸ் தன்னுடைய பொருளாதாரத் தத்துவத்தில் நிரூபித்தார். விஞ்ஞானப் பகுப்பாய்வின் பொழுது ஒரு நிகழ்வின் மேற்பரப்புக்கும் அதன் சாராம்சத்துக்கும் வேறுபாடு இருப்பதை அடிக்கடி பார்க்கிறோம். இந்த வேறுபாடு புதிராக, எதிர்பாராததாக, அன்றாட அனுபவத்துக்கு மாறானதாகத் தோன்றுகிறது. ஆனால் ''பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பதும் எளிதில் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய இரண்டு வாயுக்கள் சேர்ந்ததே தண்ணீர் என்பதும்

கூட முரணுரையாகத்தான் தோன்றுகிறது. பொருட்களின் மாயமான தோற்றங்களை மட்டும் பற்றிக் கொள்ளும் அன்றாட அனுபவங்களை வைத்துப் பார்த்தால், விஞ்ஞான உண்மை எப்போதும் முரணுரையாகவே இருக்கிறது'' என்று மார்க்ஸ் கூறுகிறார்.* உண்மையான விஞ்ஞானம் எல்லா மெய்யான நிகழ்வுகளையும் எப்பொழுதும் ஆழமாகத் துருவி ஆராய்கிறது.

மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் தான் கண்டுபிடித்த அடிப்படையான விஞ்ஞான உண்மையை வெளியிட்டார்: ''...தொழிலாளி விற்பது நேரடியாகத் தனது உழைப்பையல்ல; தனது உழைக்கும் சக்தியைத்தான்; அதைத் தற்காலிகமாக உபயோகித்துக் கொள்ளும்படி முதலாளியிடம் ஒப்படைக்கிறான்.''** உழைக்கும் சக்தி என்னும் சொற்றொடரின் மூலம் மார்க்ஸ் உழைப்பதற்கு மனிதனுடைய சக்தியைக் குறிப்பிட்டார்.

உழைப்புச் சக்தி பண்டம் என்ற முறையில் விற்பனை செய்யப்படுதல் மூலதனத்தின் ஆதித் திரட்சிக் காலத்திலிருந்து, அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றிய காலத்திலிருந்து தொடங்கியது என்று மார்க்ஸ் விளக்கினார். அக்காலத்திலும் விசேஷமான சந்தை தோன்றியிருந்தது. ஒரு பக்கத்தில், நிலம், இயந்திரங்கள், மூலப்

---

* அதே நூல், பக்கம் 96.

** அதே நூல், பக்கம் 97.

பொருட்கள் மற்றும் நிதிவசதிகளை உடைமையாகக் கொண்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் வாங்குபவர்கள். கூலியுழைப்பைச் சுரண்டுவதன் மூலம் தொடர்ச்சியாக லாபமடைந்து செல்வர்களாவது அவர்களுடைய நடவடிக்கைகளின் நோக்கமாகும். மறு பக்கத்தில், அச்சந்தையில் விற்பனையாளர்கள் இருந்தார்கள். தங்களுடைய சொந்த உழைப்புச் சக்தியைத் தவிர அவர்களிடம் விற்பனை செய்வதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு இப்பண்டத்தைத் தொடர்ச்சியாக விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் விவசாயிகளும் கைவினைஞர்களும் அப்படிப்பட்டவர்களே. ஆனால் காலப்போக்கில் பல்வேறு காரணங்களினால் அவர்கள் ஒட்டாண்டிகளானார்கள், உற்பத்திச் சாதனங்களுடன் தொடர்பை இழந்தார்கள்; ஆகவே வாழ்க்கை நடத்துவதற்குரிய சாதனங்களை இழந்தார்கள். பல லட்சக்கணக்கான உழைப்பாளிகள் பாட்டாளிகளாக மாறிய சோக வரலாற்றை மார்க்ஸ் மூலதனம் நூலின் முதல் தொகுதியில் ''ஆதித் திரட்சி என்று சொல்லப்படுவது'' என்னும் அத்தியாயத்தில்* தெளிவாகவும் நுணுக்கமாகவும் வர்ணித்தார்.

தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்

---

* K. Marx, *Capital*, vol. 1, pp. 667-724 பார்க்க.

தியை முதலாளியிடம் விற்பனை செய்கிறார் என்று விளக்கிய பிறகு இப்பண்டத்தின் மதிப்பை நிர்ணயிப்பதை மார்க்ஸ் தன்னுடைய நோக்கமாகக் கொண்டார். அவர் உழைப் பளவு மதிப்புத் தத்துவத்தை முரணில்லாமல் கையாண்டார். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் அளவு அப்பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்று அத்தத்துவம் கூறுகிறது. உழைப்புச் சக்திக்கு அதைக் கையாளுகின்ற பொழுது அதன் மதிப்பின் மீது தாக்கம் செலுத்துகின்ற பல விசேஷ நிலைமைகளை ஒருவர் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு நபர் உயிருடன் இருந்தால்தான் அவரிடம் உழைப்புச் சக்தி இருக்கும். ஒரு தொழிலாளி வாழ்வதற்கும் உழைப்பதற்கான திறமையைப் பெறுவதற்கும் குறிப்பிட்ட மதிப்பைக் கொண்ட வாழ்க்கைச் சாதனங்களின் குறிப்பிட்ட அளவை உட்கொள்வது அவசியம். தொழிலாளி இவற்றுக்குச் செலவிட்டால்தான் தன்னுடைய உழைப்புச் சக்தியை வளர்த்துக் கொண்டு தகுதியை உருவாக்க முடியும். மேலும், தொழிலாளி தன்னுடைய குழந்தைகளை வளர்ப்பதற்குக் குறிப்பிட்ட அளவுள்ள வாழ்க்கைச் சாதனங்களைச் செலவிட்டாக வேண்டும். அவருக்குப் பிறகு அவர்கள் உழைப்புச் சந்தையில் அவருடைய இடத்தைப் பெறுவார்கள், அடுத்த தலைமுறைத் தொழிலாளர்களாக மாறுவார்கள்.

உழைப்புச் சக்தியின் மதிப்பை நிர்ணயிக்கின்ற எல்லாக் காரணிகளையும் சிந்தித்த பிறகு மார்க்ஸ் பின்வரும் முடிவுக்கு வந்தார்: ''...உழைக்கும் சக்தியின் மதிப்பு அந்த உழைக்கும் சக்தியை உற்பத்தி செய்யவும் பெருக்குவதற்கும் பராமரிக்கவும் நிலை நிறுத்தவும் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களின் மதிப்புகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது....''*

உழைப்புச் சக்தியின் மதிப்பு அதன் பிரத்யேகமான தன்மைகளினால் மற்ற எல்லாப் பண்டங்களின் மதிப்புகளிலிருந்தும் வேறுபடுகிறது என்பதை மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையின் கடைசிப் பிரிவில் எடுத்துக் காட்டினார்: அதில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன; ஒன்று முற்றிலும் உடலியல் சம்பந்தப்பட்டது, அடுத்தது சமூக ரீதியானது.

உழைப்புச் சக்தியின் மதிப்பின் கீழ் எல்லை உடலியல் அம்சத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. தொழிலாளி வர்க்கம் தன்னைப் பராமரித்துக் கொண்டு புனருற்பத்தி செய்ய வேண்டுமென்றால் இன்றியமையாத வாழ்க்கைச் சாதனங்களைப் பெற்றுத் தீர வேண்டும் என்பது இதன் பொருள் என்று மார்க்ஸ் விளக்கினார்.

மேலும் ஒவ்வொரு நாட்டிலும் உழைப்புச் சக்தியின் மதிப்பு நெடுங்காலமாக உருவாகி

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 101.

யிருக்கின்ற கலாசார மற்றும் சமூக நிலைமைகளினால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் எல்லாக் குடிமக்களும் பத்திரிகைகள், புத்தகங்கள் வாங்குதல், நாடகம், சினிமாவுக்குச் செல்லுதல், பொது மன்றங்களில் உறுப்பினராதல் ஆகியவை வழக்கமாகக் கருதப்படுகின்றன. இத்தகைய மரபுகளும் பழக்கவழக்கங்களும் ஒவ்வொரு நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடையிலும் குறிப்பாக, மக்களின் சமூக கலாசார வளர்ச்சி மட்டத்தில் வேறுபடுகின்ற அரசுகளுக்கு இடையிலும் கூலிகளின் அளவை நிர்ணயிப்பதில் கணிசமான பாத்திரத்தை வகிக்கக் கூடும். இன்று தொழில்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் பல வளர்முக நாடுகளுக்கும் இடையில் கூலியின் அளவு வேறுபடுவதற்கு இது ஓரளவுக்குக் காரணமாகும்.

மார்க்ஸ் உழைப்புச் சக்தியின் மதிப்பைப் பகுப்பாய்வு செய்தது சமமான கூலி வேண்டும் என்னும் தொழிலாளர்களுடைய கோரிக்கையின்பால் அவருடைய அணுகுமுறையைத் துல்லியமாக வரையறுத்தது. இக்கோரிக்கை பகுத்தறிவுக்கு மாறானது, ஒருபோதும் நிறைவேற முடியாதது என்று அவர் மதிப்பிட்டார்.

கூலியுழைப்பு முறை நிலவுகின்ற அமைப்பில் உழைப்புச் சக்தியின் மதிப்பு மற்ற எல்லாப் பண்டங்களின் மதிப்புகளையும்

போன்று அதே முறையில் நிர்ணயிக்கப்படுகிறது. வெவ்வேறு தன்மையை (வெவ்வேறு தகுதிகளை) கொண்ட உழைப்புச் சக்தியின் உற்பத்திச் செலவுகள் ஒரே மாதிரியாக இல்லாதிருப்பதால் உற்பத்தியின் வெவ்வேறு துறைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற உழைப்புச் சக்தியின் மதிப்பு வெவ்வேறாகத்தான் இருக்க முடியும். அதைப் போல உழைப்புச் சந்தையில் புனருற்பத்திக்கு உழைப்பின் வெவ்வேறு அளவுகள் தேவைப்படுகின்ற உழைப்புச் சக்தி ரகங்கள் வெவ்வேறு விலைகளுக்கு வாங்கப்படுகின்றன.

கூலித் தொழிலாளர்களின் கூலி அளவை நிர்ணயிக்கின்ற பொழுது தார்மிக ரீதியில் நியாயமான, சரியான நிலையிலிருந்து தொடங்க முடியாது என்பதை மார்க்ஸ் விசேஷமாக வலியுறுத்தினார். தொழிலாளர்களுடைய கூலியின் அளவைப் பற்றிய பிரச்சினையை முற்றிலும் தார்மிகக் கண்ணோட்டத்தில் அணுகினால் அதன் சாராம்சத்தை விளக்க முடியாது. உண்மையில் கூலி முறையில் புறவய ரீதியில் அவசியமானதை, தவிர்க்க முடியாததை நிறுவுவதில் பிரச்சினை அடங்கியிருக்கிறது.

மார்க்ஸ் முதல் முறையாக கூலித் தொழிலாளியின் கூலியை ஒழுங்குபடுத்துகின்ற புறவயமான பொருளாதார விதியை வெளியிட்டார்; அதன் மூலம் மொத்த பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரமும் செய்ய முடியாததை நிறைவேற்றினார். தொழிலாளியின்

கூலி அவனுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பினால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தார். மார்க்சின் கண்டுபிடிப்பு கூலி அமைப்பில் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான நிலையைப் பற்றிய ஆழமான விளக்கத்துக்கு, அவருடைய பொருளாதாரத் தத்துவத்தின் முக்கியமான பகுதியாகிய உபரி மதிப்புத் தத்துவத்துக்கு உண்மையான விஞ்ஞான விரிவுரையின் ஆரம்ப நிலையாக இருந்தது. அத்தத்துவம் தொழிலாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தைத் துலாம்பரமாக்கியது.

# உபரி மதிப்பின் உற்பத்தி

மார்க்ஸ் தன்னுடைய உபரி மதிப்புத் தத்துவத்தில் இரகசியங்களில் மிகவும் மறைத்து வைக்கப்பட்ட இரகசியத்தை, முதலாளி வர்க்கம் செல்வத்தைத் திரட்டியது எப்படி என்பதை அம்பலப்படுத்தினார்; மூலதனம் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கான காரணங்களை விளக்கினார். அவர் மூலதனம் நூலின் முதல் தொகுதியில் உபரி மதிப்புத் தத்துவத்தின் அடிப்படைகளை நுணுக்கமாக விளக்கினார். அவர் கூலி, விலை, லாபம் அறிக்கையில் தன்னுடைய தத்துவத்தின் மிகவும் முக்கியமான பகுதிகளை மட்டுமே விளக்கினார். அவை முதலாளித்துவ உற்பத்தி முறையில் கூலித் தொழிலாளியின் மெய்யான நிலையைத் தெளிவான முறையில் எடுத்துக்காட்டின.

மார்க்ஸ் உபரி மதிப்புத் தத்துவத்தைப் பின்வரும் பிரமேயத்திலிருந்து தொடங்கினார். தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியை அதன் மதிப்புக்குத் தகுந்தவாறு முதலாளியிடம் விற்பனை செய்கிறார். அந்த விற்பனையில் கிடைக்கின்ற பணத்தைக்

கொண்டு தொழிலாளி அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத சராசரி அவசியப் பொருட்களைப் பெறுகிறார், அதன் மூலம் தன்னைப் பராமரிக்கிறார் என்பது இதன் அர்த்தம்.

மார்க்ஸ் ஸ்தூலமான உதாரணங்களைக் கொடுத்து உபரி மதிப்புத் தத்துவத்தின் பொதுவான கருத்தை மிகச் சிறப்பான முறையில் விளக்கினார். அவர் கொடுத்த உதாரணத்தை ஆராய்வதன் மூலம் தத்துவ ரீதியில் முக்கியமான பொதுமைப்படுத்தல்களைச் செய்ய முடியும்.

ஒரு தொழிலாளி தனக்கு அவசியமான சராசரி அளவுப் பொருட்களைப் பெறுவதற்கு நாள்தோறும் சராசரி நான்கு மணி நேரம் உழைக்க வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். இந்த உழைப்பின் அளவு மூன்று ஷில்லிங்குகளுக்குச் சமமான தங்கத்தின் அளவில் பொதிந்திருக்கிறது. ஆகவே மூன்று ஷில்லிங்குகள் அத்தொழிலாளியின் ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பின் விலையாக அல்லது பண வெளியீடாக இருக்கிறது. தொழிலாளி ஒரு நாளில் நான்கு மணி நேரம் வேலை செய்தால் அவர் தன்னுடைய அன்றாட வாழ்க்கைக்குப் போதுமான மதிப்பை நாள்தோறும் உற்பத்தி செய்கிறார்.

அத்தொழிலாளி ஒரு நெசவாளி என்று வைத்துக் கொள்வோம். அவர் நாள்தோறும் நான்கு மணி நேரம் வேலை செய்தால்

அவர் பருத்தியில் மூன்று ஷில்லிங் மதிப்பை அதாவது தன்னுடைய உழைப்புச் சக்தியின் அன்றாட மதிப்புக்குச் சமமான மதிப்பைச் சேர்க்கிறார். இதில் முதலாளிக்கு எவ்வித மான வருமானமும் கிடையாது. ஆகவே அவர் இதில் திருப்தி அடைய மாட்டார், பணத்தைத் திரட்டுவதற்கு ஒரு வழியைத் தேடுவார் என்பது இயற்கையே.

முதலாளி உபரி மதிப்பைப் பெறுவதற்கு, தன்னால் செலவிடப்பட்ட மூலதனத்தை அதிகப்படுத்துவதற்கு எப்படி வழியைக் கண்டு பிடிக்கிறார் என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். முதலாளி உழைப்புச் சக்தியை வாங்கியிருப்பதால், அதன் மதிப்பின் விலை யைக் கொடுத்திருப்பதால் தான் வாங்கிய பண்டத்தை உபயோகிப்பதற்கு, அதாவது தொழிலாளியை வேலை செய்யுமாறு நிர்ப் பந்திப்பதற்கு உரிமையைப் பெறுகிறார். அவர் வாங்கிய பண்டத்தை, உழைப்புச் சக் தியை வேலை நாள் முழுவதும் (வாரம், மாதம், இதரவை) உபயோகிக்கிறார் என் பது மெய்யே.

இங்கே மார்க்ஸ் உபரி மதிப்பின் மூலத் தை வெளிப்படுத்துகின்ற தீர்மானமான முனையைத் தன்னுடைய கூட்டத்திலிருப் பவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரு கிறார்.

முதலாளி கூலி கொடுக்கின்ற உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும்—அந்த மதிப்பு வேலை நாளின் ஒரு பகுதியின் போது புனருற்பத்தி

செய்யப்படக் கூடும்—முழு வேலை நாளின் போது தொழிலாளி படைக்கக் கூடிய மதிப்புக்கும் இடையில் பேரளவான வேறுபாடு இருக்கிறது.

இந்த வேறுபாட்டை விளக்குவதற்கு மார்க்ஸ் மறுபடியும் நெசவாளியை உதாரணமாகக் காட்டினார். மார்க்சின் வாதங்களை கவனிப்போம். நெசவாளி தன்னுடைய உழைப்புச் சக்தியின் அன்றாட மதிப்பைப் புனருற்பத்தி செய்வதற்கு நாள்தோறும் நான்கு மணி நேரம் வேலை செய்து மூன்று ஷில்லிங் மதிப்பை—அது அவருடைய நாட் கூலிக்குச் சமம்—படைப்பது போதுமானது என்றாலும் அவர் எட்டு, பத்து அல்லது அதற்கும் அதிகமாகக் கூட வேலை செய்ய முடியும். முதலாளி நெசவாளியை (உதாரணமாக) நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்துகிறார். அதன் விளைவாக, தன்னுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பை ஈடு செய்வதற்கு அவசியமான நான்கு மணி நேர உழைப்புக்கும் கூடுதலாக அவர் மேலும் நான்கு மணி நேரம் வேலை செய்கிறார். அதை உபரி உழைப்பு நேரம் என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். உண்மையில் தொழிலாளியின் வேலை நேர அமைப்பு எப்படி உருவெடுக்கிறது என்பதைப் பின்வருமாறு விளக்க முடியும் (மார்க்ஸ் தொழிலாளியின் வேலை நேரத்தை விளக்குவதற்கு இதைப் போன்று ஒரு அட்டவணையை மூலதனம் நூலின் முதல்

தொகுதியில் ''வேலை நாள்'' என்னும் அத்தியாயத்தில் கொடுத்துள்ளார்*):

| 4 மணி | 4 மணி |
|---|---|
| அவசியமான உழைப்பு நேரம் | உபரி உழைப்பு நேரம் |

வேலை நாளின் முதல் பகுதி அவசியமான உழைப்பு நேரம்; அந்த நேரத்தில் தொழிலாளி தனக்காக உழைக்கிறார், அதாவது தன்னுடைய உழைப்புச் சக்தியின் அன்றாட மதிப்புக்கு அல்லது நாட் கூலிக்குச் சமமான மதிப்பைப் படைக்கிறார். இரண்டாவது பகுதி உபரி உழைப்பு நேரம். அதில் அவர் எவ்விதமான கூலியும் பெறாமல் முதலாளிக்காக உழைக்கிறார்.

உபரி உழைப்பின் போது உபரி உற்பத்திப் பொருள் படைக்கப்படுகிறது. அது உபரி மதிப்பைக் கொண்டிருக்கிறது. அதுதான் முதலாளியின் செல்வத்தின் தோற்றுவாய். உதாரணமாக, ஒரு நெசவாளி தன்னுடைய வேலை நேரத்தின் முதல் நான்கு மணி நேர வேலையில் மூன்று ஷில்லிங் மதிப்பை (அது அவருடைய ஒரு நாட் கூலிக்குச் சமம்) பருத்தியுடன் சேர்க்கிறார் என்றால் அடுத்த நான்கு மணி நேரத்தில் அவர் இன்னும் மூன்று ஷில்லிங் மதிப்பைப் பருத்தியுடன் சேர்க்கிறார், அதற்குரிய நூலின் உபரி அளவை உற்

* K. Marx, *Capital*, vol. 1, p. 222.

பத்தி செய்கிறார். தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியை முதலாளிக்கு விற்பனை செய்திருப்பதால் எட்டு மணி வேலை நேரத்தின் போது அவர் படைத்த மதிப்பு (3+3 = 6 ஷில்லிங்குகள்) அல்லது மொத்த உற்பத்திப் பொருளுமே முதலாளிக்குச் சொந்தமாகிறது.

முதலாளி உழைப்புச் சக்தியை வாங்கும் பொழுது நாளொன்றுக்கு மூன்று ஷில்லிங் முன் பணமாகத் தருகிறார்: உற்பத்தியின் போது உழைப்புச் சக்தி நுகர்வு செய்யப்படுவதால் ஆறு ஷில்லிங் மதிப்பை அடைகிறார். அதில் கூலித் தொழிலாளியின் எட்டு மணி நேர உழைப்பு பொருண்மையாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே தொழிலாளி ஒவ்வொரு நாளும் தன்னுடைய உழைப்பின் மூலம் ஆறு ஷில்லிங் மதிப்பைப் படைக்கிறார். முதலாளி உழைப்புச் சக்திக்குக் கூலி கொடுப்பதற்காக அந்த மதிப்பில் பாதிய்யை எடுத்துக் கொள்கிறார். மறுபாதியாகிய உபரி மதிப்பில் தொழிலாளி முதலாளிக்குத் தருகின்ற உழைப்பு பருவடிவமாக்கப்பட்டிருக்கிறது. நெசவாளியின் உழைப்பைப் பற்றி இங்கே தரப்பட்டிருக்கின்ற மொத்தப் பகுப்பாய்வும் கூலித் தொழிலாளியின் எவ்விதமான உழைப்புக்கும் பொருந்தும். இப்பகுப்பாய்விலிருந்து மார்க்ஸ் பின்வரும் முடிவைப் பெற்றார். ''மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே நிலவும் இந்த விதமான பரிவர்த்தனை மீதுதான் முதலாளித்துவ உற்பத்தி அல்லது

கூலி உழைப்பு முறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது; இது போன்ற பரிவர்த்தனை தொடர்ச்சியாகத் தொழிலாளியைத் தொழிலாளியாகப் புனருற்பத்தி செய்யவும் முதலாளியை முதலாளியாகப் புனருற்பத்தி செய்யவும் காரணமாக இருக்கிறது.''*

ஆகவே முதலாளித்துவ உற்பத்தி முறை தொழிலாளர்களின் உபரி உழைப்பை முதலாளி வர்க்கம் கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று மார்க்ஸ் தன்னுடைய உபரி மதிப்புத் தத்துவத்தில் எடுத்துக்காட்டினார். கூலி முறை முழுவதுமே முதலாளித்துவ சமூகம் சுரண்டுபவர்கள் (முதலாளிகள்) சுரண்டப்படுபவர்கள் (தொழிலாளிகள்) என்று பிரிந்திருப்பதைத் தொடர்ச்சியாக வலுப்படுத்துகிறது.

மார்க்ஸ் தன்னுடைய உபரி மதிப்புத் தத்துவத்தைப் பூரணமாக்குகின்ற பொழுது முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுகின்ற அளவைத் துல்லியமான கணித முறையில் எடுத்துக் கூறினார். அவர் உபரி மதிப்பு விகிதம் என்னும் கருத்தை அறிமுகம் செய்தார். அது உபரி உழைப்பு நேரத்துக்கும் அவசியமான உழைப்பு நேரத்துக்கும் அல்லது உபரி மதிப்புக்கும் உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் இடையிலுள்ள விகிதமா

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 104.

கும் (இரண்டும் அளவு ரீதியாக ஒன்றுதான்). இந்த விகிதம் ''...ஒரு தொழிலாளி தனது உழைக்கும் சக்தியின் மதிப்பைத் திரும்பவும் உற்பத்தி செய்வதற்கு அல்லது தனது கூலிக்கு ஈடு செய்வதற்கு மட்டும் எவ்வளவு மணி நேரம் உழைத்தால் போதுமோ அதற்கும் மேலாகவும் கூடுதலாகவும் வேலை நாள் நீடிக்கப்படுவதன் விகிதாச்சாரத்தைப் பொறுத்திருக்கிறது''* என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

மூலதனம் நூலின் முதல் தொகுதியில் ''உபரி மதிப்பின் விகிதம்'' என்னும் அத்தியாயத்தில் தரப்பட்டிருக்கின்ற உபரி மதிப்பு விகிதத்தின் சூத்திரம் பாட்டாளி வர்க்கத்தின் சுரண்டல் மட்டம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அந்த உபரி மதிப்பு விகிதத்தின் (m') சூத்திரம் கீழே தரப்படுகிறது:

$$m' = \frac{\text{உபரி உழைப்பு நேரம்}}{\text{அவசியமான உழைப்பு நேரம்}}$$

மார்க்சின் வாழ்க்கைக் காலத்தில் இங்கிலாந்தில் உபரி மதிப்பு விகிதம் சுமார் 100 சதவிகிதமாக இருந்தது. தொழிலாளி பாதி உழைப்பு நேரத்தில் தனக்காக உழைத்தார், மறுபாதியில் முதலாளிக்காக உழைத்தார் என்பது இதன் அர்த்தமாகும்.

மார்க்ஸ் மூலதனம் நூலை எழுதத் தொடங்

---

* அதே நூல், பக்கங்கள் 104—105.

கிய பொழுது ''நவீன சமூகத்தின் இயக்கத்தின் பொருளாதார விதியை வெளிப்படுத்துவது''*, அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயக்கத்தின் விதியை விளக்குவது தன்னுடைய முக்கியமான கடமை என்று வரையறுத்தார். மார்க்ஸ் அந்த விதியைப் பின்வரும் முறையில் சுருக்கமாகக் கூறினார்: ''உபரி மதிப்பை உற்பத்தி செய்வதே இந்த உற்பத்தி முறையின் தனிமுதலான விதியாகும்.''** வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் முதலாளிகள் கூலித் தொழிலாளர்களின் கூலி கொடுக்கப்படாத உபரி உழைப்பை சுவீகரிப்பதன் மூலம் பணக்காரர்களாகிறார்கள்.

மார்க்ஸ் கண்டுபிடித்த உபரி மதிப்பு உற்பத்தி விதி, முதலாளித்துவத்தின் அடிப்படையான பொருளாதார விதி முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் இரண்டு மிக முக்கியமான போக்குகளை உருவாக்குகிறது. முதல் போக்கு முதலாளித்துவ சமூகத்தில் மேன்மேலும் அதிகமான பகுதி கூலித் தொழிலாளர்களாக மாறுவதாகும். இன்று வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வேலை செய்பவர்களில் சுமார் 80 சதவிகிதத்தினர் தனிப்பட்ட முதலாளிகள், ஏகபோகங்கள் மற்றும் முதலாளித்துவ அரசில் கூலித் தொழிலாளர்கள் என்னும் உண்மை இப்

* K. Marx, *Capital*, vol. 1, p. 20.

** *Ibid.*, p. 580.

போக்கை நிரூபிக்கிறது. இரண்டாவது போக்கு முதலாளித்துவம் வளர்ச்சியடைகின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுதல் தொடர்ச்சியாகத் தீவிரமடைகிறது என்பதாகும்.

ஏகாதிபத்தியத்தின் கீழ் முதலாளித்துவத் தொழில் முனைவர்கள் விஞ்ஞான தொழில் நுட்பவியலின் மிகவும் சமீப சாதனைகளையும் உழைப்பை விஞ்ஞான ரீதியாக ஒழுங்கமைத்தலையும் பயன்படுத்தி தொழிலாளர்களின் உழைப்பைக் கணிசமான அளவில் தீவிரப்படுத்துகிறார்கள், அவர்களைக் கசக்கிப் பிழிந்து அதிகமான உபரி உழைப்பைப் பெறுகிறார்கள் என்பதை லெனின் நிறுவினார். அவர் ''விஞ்ஞான ரீதியான'' கடும் உழைப்பு முறை என்னும் கட்டுரையில் ''முன்னைப் போன்று அதே அளவைக் கொண்ட வேலை நேரத்தில் தொழிலாளியிடமிருந்து மூன்று மடங்கு அதிகமான உழைப்பைப் பிழிந்தெடுக்க''* முயற்சி செய்து பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதை அதிகப்படுத்துவதற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் சாதனைகளைப் பயன்படுத்துவதில் அமெரிக்க முதலாளித்துவம் முதலாவதாக இருக்கிறது என்று எடுத்துக்காட்டினார்.

நவீன முதலாளித்துவத்தின் நிலைமைகளில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 18, Moscow, Progress Publishers, 1973, p. 154.

ததைக் காட்டிலும் பாட்டாளி வர்க்கம் மிக வும் அதிகமாகச் சுரண்டப்படுகிறது. ஆகவே அமெரிக்காவில் ஒரு சராசரித் தொழிலாளி தன்னுடைய எட்டு மணி நேர வேலை நாளில் இரண்டு மணியை மட்டுமே தனக்குச் செல விடுகிறார், எஞ்சிய ஆறு மணி நேரத்தை முதலாளிக்குச் செலவிடுகிறார். சுரண்டல் மட்டம் 300 சதவிகிதத்தை $\left(\frac{6 \text{ மணி}}{2 \text{ மணி}} \times 100\right)$ எட்டிவிட்டது என்பது இதன் அர்த்தமாகும்.

மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் ''உழைப்பின் மதிப்பு'' என்னும் ஒன்பதா வது பிரிவில் தொழிலாளிக்கும் முதலாளிக் கும் இடையில் அடிப்படையான பொருளா தார உறவின் சாராம்சத்தை விளக்குகின்ற பொழுது இந்த உறவு மேற்கொள்கின்ற வெளிவடிவத்தை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்தார்.

அவர் இந்த நோக்கத்துடன் உழைப்பின் மதிப்பு அல்லது விலை என்னும் கருதுகோ ளைப் பகுப்பாய்வு செய்வதற்கு மறுபடியும் திரும்பினார். அக்கருத்து அறிவுக்குப் புறம் பானது அதாவது எதார்த்தத்தைப் பற்றிய உண்மையான பிரதிபலிப்பு அல்ல; ஏனென் றால் உழைப்பு ஒரு பண்டம் அல்ல, அது பண்டமாக இருக்கவும் முடியாது என்று அவர் முன்னர் விளக்கியிருந்தார். ஆனால் தொழிலாளி இவை எல்லாவற்றையும் கவ னிக்கவில்லை. அவர் வேலை முடிவடைந்த தும் கூலியைப் பெறுகிறார். அவர் கூலிக்குப்

பதிலாகத் தன்னுடைய மொத்த உழைப்பையும் முதலாளிக்குத் தருவதைத் தெளிவாகப் பார்க்கிறார். எனவே உழைப்பை ஒரு பண்டத்தைப் போல விற்பனை செய்வதாக அவர் கருதுகிறார்.

மார்க்ஸ் பின்வரும் உதாரணத்தின் மூலம் தன்னுடைய பொதுவான கருத்துகளை எளிய முறையில் விளக்கினார். தொழிலாளியின் உழைப்புச் சக்தியின் விலை நான்கு மணி நேர உழைப்பின் பருவடிவமான மூன்று ஷில்லிங்குகளுக்கு சமம் என்று வைத்துக் கொள்வோம். தொழிலாளி முதலாளியின் தொழிற்சாலையில் எட்டு மணி நேரம் வேலை செய்றார்; ஆகவே அந்த மூன்று ஷில்லிங்குகள் எட்டு மணி நேர உழைப்பு முழுமைக்கும் மதிப்பு அல்லது விலை என்று கருதுகிறார்; உண்மையில் அந்த எட்டு மணி நேரத்தில் ஆறு ஷில்லிங் மதிப்பு படைக்கப்படுகிறது (இது தொழிலாளிக்குத் தெரியாது). மார்க்ஸ் இதிலிருந்து இரண்டு முக்கியமான முடிவுகளைச் செய்தார். முதலாவதாக, தொழிலாளி முதலாளியிடம் விற்பனை செய்கின்ற உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது விலை மேற்பார்வைக்கு அந்த உழைப்பினுடைய மதிப்பு அல்லது விலையாகத் தோன்றுகிறது. இரண்டாவதாக, முதலாளி தொழிலாளியின் உழைப்பு நேரத்தில் ஒரு பகுதிக்கு மட்டுமே கூலி கொடுக்கிறார், அடுத்த பகுதிக்குக் கூலி கொடுப்பதில்லை (தொழிலாளி அந்தப் பகுதி நேரத்தில் முதலாளிக்கு உபரி மதிப்

பைப் படைக்கிறார்) என்ற போதிலும் அவருடைய முழு உழைப்புக்குமே கூலி தரப்படுவதாகத் தோன்றுகிறது. மார்க்ஸ் மூலதனம் நூலின் முதல் தொகுதியில் கூலியின் வடிவங்களைப் பற்றி எழுதியுள்ள அத்தியாயங்களில், தொழிலாளியின் கூலியைக் கணக்கிடுகின்ற பொழுது எத்தகைய ஸ்தூலமான முறைகளைக் கொண்டு தொழிலாளியின் கூலி கொடுக்கப்படாத உழைப்பை மறைப்பது எப்பொழுதுமே சாத்தியம் என்பதை நுணுக்கமாக விளக்கினார்.

மேற்கூறியவை எல்லாவற்றிலுமிருந்தும் மார்க்ஸ் ஒரு பொதுவான முடிவுக்கு வந்தார்: ''இந்தப் போலியான தோற்றம் கூலி உழைப்பை உழைப்பின் பிற வரலாற்று பூர்வமான வடிவங்களிலிருந்து தனித்துப் பிரித்துக் காட்டுகிறது. கூலி உழைப்பு முறையின் கீழ் ஊதியமற்ற உழைப்பும் ஊதியமுள்ள உழைப்பாகத் தோன்றுகிறது.''* கூலித் தொழிலாளியின் உழைப்பை அடிமை மற்றும் பண்ணையடிமை விவசாயியின் உழைப்புடன் வரலாற்று ரீதியில் ஒப்பீடு செய்து இக்கருத்து நிறுவப்பட்டது. அடிமைமுறை மற்றும் நிலப்பிரபுத்துவ அமைப்புகள் நிலவிய காலத்தில் கூலி கொடுக்கப்படாத உழைப்பு மறைக்கப்படவில்லை, சுரண்டல்காரர்கள் அதைக் கட்டாயமாகச் சுமத்தி

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 106.

னார்கள் என்பதை ஒப்பீடு எடுத்துக்காட்டியது. ஆனால் முதலாளித்துவ அமைப்பில் அது மறைக்கப்படுகிறது, விருப்பபூர்வமான உழைப்பு என்னும் வெளித் தோற்றத்தைக் கொண்டிருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான பொருளாதார உறவின் சாராம்சத்தை விஞ்ஞான ரீதியாக விளக்குவதிலுள்ள கஷ்டத்தை மார்க்சின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. முதலாளிகள் உபரி உழைப்பைக் கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்வதன் மூலம் கூலித் தொழி ாளர்களைச் சுரண்டுதல் என்னும் இந்த ாராம்சம் மிகவும் அழுத்தமாக மூடி மறைக் ப்பட்டிருந்தது. அன்று போலவே இன்றும் கொச்சையான அரசியல் பொருளாதாரம் இந்த மோசடியைத் தத்துவ ரீதியில் நிலை நாட்டுவதற்கு முயல்கிறது. தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியை, தன்னுடைய வாழ்க்கையின் ஒரே தோற்றுவாயைக் கட்டாயமாக விற்பனை செய்வது உழைப்பை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலில் சுதந்திரமான, சமத்துவமான நடவடிக்கை, அது கூலியினால் முற்றிலும் ஈடு செய்யப் படுகிறது என்று விளக்குகிறது. மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்துக்குச் செய்த மகத்தான வரலாற்றுச் சேவையை இங்கே பார்க்க முடியும்.

மார்க்ஸ் கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கையில் உபரி மதிப்புத் தத்துவத்தை

விளக்கியதன் மூலம் முதலாவது அகிலத்தின் பொதுக் கவுன்சில் உறுப்பினர்களுக்கு (மற்றும் பிற்காலத்தில் அவருடைய அறிக்கையைப் படிப்பவர்களுக்கு) தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்ட பின்வரும் விஞ்ஞான உண்மைகளை ஆழமாகப் புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை அளித்தார்:

—கூலித் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலுள்ள உறவுகள் முற்றிலும் பொருளாதார ரீதியானவை; அவை சுரண்டலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் முதலாளி வர்க்கம் தொழிலாளியின் கூலி கொடுக்கப்படாத உழைப்பை சுவீகரித்துக் கொள்கிறது;

—பாட்டாளி வர்க்கம் மற்றும் முதலாளி வர்க்கத்தின் அடிப்படையான நலன்கள் நேரெதிரானவை; அவற்றை சமரசப்படுத்த முடியாது;

—முதலாளித்துவச் சுரண்டல் மூடி மறைக்கப்பட்ட தன்மையைக் கொண்டிருக்கிறது; மனிதனை மனிதன் சுரண்டுகின்ற முந்திய வரலாற்று வடிவங்கள் அனைத்திலிருந்தும் அது வேறுபட்டிருக்கிறது;

—முதலாளித்துவப் பொது அமைப்பில் பாட்டாளி வர்க்கத்தின் மெய்யான நிலையை மார்க்சின் உபரி மதிப்புத் தத்துவம் மட்டுமே வெளிப்படுத்தியது.

## லாபம்: அதன் சாராம்சமும் வினியோகமும்

சுரண்டுகின்ற மூன்று வர்க்கங்களாகிய தொழில்முனைவர்கள், வங்கி முதலாளிகள், நிலவுடைமையாளர்கள் ஆகியோருடைய வருமானங்கள் சாராம்சத்தில் எவை என்ற பிரச்சினையை மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் விரிவாக ஆராய்ந்தார். அதன் மூலம் இப்பிரச்சினையைப் பற்றிய கொச்சையான, முற்றிலும் போலியான பூர்ஷ்வாக் கருத்துகளுக்கு எதிராகத் தன்னுடைய விஞ்ஞான ரீதியான தீர்வை முன்வைத்தார்.

மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது, லாபம் என்பது முதலாளி முதலீடு செய்திருக்கின்ற மூலதனத்திற்குக் கிடைக்கின்ற வருமானம் என்று கருதப்படுகிறது. முதலாளி பண்டங்களின் விலைகளுடன் கூடுதலாக ஒன்றைச் சேர்க்கிறார், அதாவது பண்டங்களின் மதிப்புக்குக் கூடுதலான விலைகளில் அவற்றை விற்பனை செய்கிறார் என்ற மெய் விவரம் இந்தக் கூடுதல் வருமானத்துக்குக் காரணம் என்று பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் பெரும்பாலும் விளக்குகிறார்கள்.

ஆனால் மார்க்ஸ் அறிக்கையின் ஆறாவது பிரிவில் (''மதிப்பும் உழைப்பும்'') உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை ஆராய்கின்ற பொழுது இக்கருத்து முற்றிலும் தவறானது

என்பதைச் சுட்டிக் காட்டினார். எல்லா முதலாளிகளும் ஏக காலத்தில் பண்டங்களின் விலைகளை 10 சதவிகிதம் அதிகப்படுத்துவதாக வைத்துக் கொண்டால் அவர்களில் எவரும் லாபமடைய மாட்டார்கள். ஏனென்றால் முதலாளி வாங்குபவராகவும் விற்பனையாளராகவும் இருக்கிறார். விற்பனையாளர் என்ற முறையில் அவருக்குக் கிடைக்கின்ற லாபத்தை (அப்பண்டத்தை 10 சதவிகிதம் அதிகமான விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைப்பது) வாங்குபவர் என்ற முறையில் (பண்டத்தின் மதிப்பைக்காட்டிலும் 10 சதவிகிதம் அதிகமான விலைக்கு அதை வாங்குவதன் மூலம்) இழந்து விட நேரும். இத்தகைய வர்த்தகத்தில் லாபம் கிடைக்காது. இதிலிருந்து பின்வரும் முடிவுக்குத் தான் வர வேண்டும்: லாபத்தின் பொது இயல்பை விளக்குவதற்குப் பண்டங்கள் சராசரியில் தம்முடைய உண்மையான மதிப்புக்குத்தான் விற்பனை செய்யப்படுகின்றன, பண்டங்களின் உண்மையான மதிப்புக்குச் செய்யப்படுகின்ற விற்பனையிலிருந்துதான் லாபம் கிடைக்கிறது, அதாவது அவற்றில் அடங்கியிருக்கின்ற உழைப்பின் அளவின் விகிதாச்சார விற்பனையிலிருந்துதான் லாபம் கிடைக்கிறது என்னும் கருத்துரையிலிருந்துதான் ஒருவர் தொடங்க வேண்டும். இந்த முடிவை மறுத்தால் முதலாளிகளுக்கு எங்கிருந்து லாபம் கிடைக்கிறது என்பதை விளக்குவது முற்றிலும் இயலாததாகும்.

''பண்டத்தை அதன் மதிப்பில் விற்பதால் லாபம் கிடைக்கிறது'' என்னும் பத்தாவது பிரிவில் மார்க்ஸ் உபரி மதிப்புத் தத்துவத்தை உபயோகிக்கின்ற பொழுது பண்டங்களை அவற்றின் மதிப்புக்குச் சமமான விலைகளுக்கு விற்பனை செய்யும் பொழுது லாபம் எப்படிக் கிடைக்கிறது என்பதை விளக்கினார். அவர் பின்வரும் முக்கியமான அம்சத்தை சுட்டிக் காட்டினார்: 1) முதலாளிக்குப் பண்டத்தின் விலை என்ன? 2) பண்டத்தைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தப்பட்ட சமூக உழைப்பைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தால் பண்டத்தின் உண்மையான விலை என்ன? இந்த இரண்டு வெவ்வேறு பரிமாணங்களுக்கு இடையிலும் தெளிவாக உள்ள வேறுபாட்டைக் காண வேண்டும்.

மார்க்ஸ் ஒரு ஸ்தூலமான உதாரணத்தை எடுத்துக் கொண்டு பின்வருமாறு விளக்குகிறார்: ஒரு பண்டத்தைத் தயாரிப்பதில் முதலாளியின் செலவுகளில் அப்பண்டத்தின் தயாரிப்பில் செலவழிக்கப்பட்ட உற்பத்திச் சாதனத்தின் மதிப்பு, உழைப்புச் சக்தியின் மதிப்பு ஆகியவை அடங்கியிருக்கின்றன. ஆனால் தொழிலாளி ஒரு வேலை நாளில் தன்னுடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமான மதிப்பை மட்டுமன்றி உபரி மதிப்பையும் படைக்கிறார். அப்படியானால் செலவிடப்பட்ட தொழிலாளியின் உழைப்பின் மொத்த அளவில் முதலாளி கூலி கொடுக்காத பகுதியும் (உபரி உழைப்பு) அடங்கி

யிருக்கிறது என்று அர்த்தம். இதுதான் லாபம். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் முதலாளிக்கென்று தொழிலாளி கூலியில்லாமல் படைக்கின்ற உபரி மதிப்பு லாபமாகும். முதலாளி பண்டத்தை அதன் உண்மையான மதிப்புக்கு விற்பனை செய்கின்றபொழுது அவர் இலவசமாக அடைகின்ற உபரி மதிப்பும் அவருக்குக் கிடைக்கிறது. ஆகவே முதலாளி ஒரு பண்டத்தை உபரி மதிப்பை உள்ளிட்ட அதன் உண்மையான மதிப்புக்கு விற்பனை செய்வதனால் லாபத்தைப் பெறுகின்றாரே தவிர, அப்பண்டத்தை அதன் மதிப்பைக் காட்டிலும் கூடுதலான விலைக்கு விற்பதனால் அல்ல என்பதைப் பார்க்க முடியும். ஆகவே மார்க்ஸ் பின்வரும் முடிவுக்கு வந்தார்: ''எனவே, பண்டத்தை அதன் மதிப்பிற்கே அதாவது அதில் பருவடிவாக்கப்பட்டிருக்கும் உழைப்பின் ஒட்டு மொத்தமான அளவிற்கே விற்பதால் முதலாளி நிச்சயமாக லாபத்திற்கே விற்பான். அவன் தான் ஈடு செலுத்திப் பெற்றதை மட்டுமன்றி தனது தொழிலாளியின் உழைப்பு செலவிடப்பட்டிருந்த போதிலும் தான் எதையும் செலுத்தாமல் பெற்றதையும்கூட விற்கிறான்.''*

தொழில்முனைவர்கள், வங்கி முதலாளிகள் மற்றும் நிலவுடைமையாளர்களின் வருமானங்களின் தோற்றுவாய்களைப் பற்

* அதே நூல், பக்கங்கள் 108—109.

றிய கொச்சையான பூர்ஷ்வாக் கருத்துகளை மார்க்ஸ் தன்னுடைய லாபத் தத்துவத்தின் மூலம் தீர்மானமாக முறியடித்தார். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜா.ப.ஸேய்* இக்கருத்துகளைத் தத்துவ ரீதியில் நிறுவுவதற்கு முயற்சி செய்தார். அவர் வகுத்த உற்பத்தியின் ''மூன்று காரணிகளைப்'' பற்றிய தத்துவம் பூர்ஷ்வாப் பொருளியலாளர்களிடம் பரவலாக இருந்த ''ஆக்கத் திறனுடைய மூலதனம்'' என்னும் கருத்துக்கு அடிப்படையாக இருந்தது. எல்லாக் காலங்களிலும் உற்பத்தி நிகழ்வுப் போக்கில் நிலம், ழைப்பு, மூலதனம் என்னும் மூன்று கார ரிகள் ஈடுபட்டுள்ளன என்று ஸேய் வலி றுத்தினார். அவை சுயேச்சையான உற்பத் த் திறனைக் கொண்டிருக்கின்றன எனலாம்; அவை வருமானத்தின் சம்பந்தப்பட்ட வடிவங்களுக்குத் தோற்றுவாய்களாக இருக்கின்றன. நிலத்திலிருந்து நில வாடகையும் உழைப்பிலிருந்து கூலியும் மூலதனத்திலிருந்து லாபமும் கிடைக்கின்றன. ஆகவே எந்த நபரும் அடுத்த நபரைச் சுரண்டவில்லை, ஒவ்வொருவருக்கும் வருமானம் கிடைக்கிறது, மூலதனத்தின் ஆக்கத் திறனின் விளைவு லாபம் ஆகும் என்று அவர் கூறினார்.

---

** ஜான் படீஸ்ட் ஸேய் (1767—1832)—பிரெஞ்சுப் பொருளியலாளர், கொச்சையான அரசியல் பொருளாதாரத்தின் முதல் பிரதிநிதிகளில் ஒருவர், பெரிய முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தி.*

மார்க்ஸ் ஸேயின் கொச்சையான பொருளாதாரக் கருத்தை மனதில் வைத்துக் கொண்டு உற்பத்திச் சாதனத்தின் வடிவத்தில் இருக்கின்ற மூலதனம் கடந்த காலத்திய, பருவடிவான உழைப்பைப் பிரதிநிதித்துவம் செய்கிறது, அது உழைப்புச் சக்தியைப் போன்று புதிய மதிப்பின் தோற்றுவாயாக இருக்க முடியாது என்று அறிக்கையில் குறிப்பாக சுட்டிக் காட்டினார். ஒவ்வொரு பண்டத்திலும் செலவிடப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் (இயந்திரங்கள், மூலப்பொருட்கள், எரிசக்தி, இதரவை) மதிப்பு—அதன் பரிமாணம் நிலையாக இருப்பது—உற்பத்திப் பொருளின் மொத்த மதிப்பின் பகுதியாகும். மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையின் 6 மற்றும் 10ஆவது பிரிவுகளில் வடிவ கணித உதாரணங்களைப் பயன்படுத்தி உற்பத்திச் சாதனங்களை வாங்குவதில் செலவழிக்கப்பட்ட மதிப்பு தன்னளவில் அளவு ரீதியாக மாறுவதில்லை, அப்படி மாற முடியாது என்பதை விளக்கினார், தொழிலாளியின் உழைப்புச் சக்தியின் செலவு அதனுடன் சேர்த்துக் கொள்ளப்படும் பொழுது மட்டுமே அது வளர்ச்சியடைகிறது. ஆகவே மூலதனத்தின் விசேஷமான ''ஆக்கத் திறனைப்'' பற்றிப் பேசுதல் முட்டாள்தனமாகும். மூலதனத்தைப் போன்றதே நிலம். இயற்கைப் பொருள் என்ற முறையில் நிலத்தில் உள்ளுறையாக எவ்விதமான ''ஆக்கத் திறனும்'' கிடையாது. வங்கி முதலாளியின் பணமும்

இதைப் போன்றதே. கடந்த காலத்திய உறைந்திருக்கின்ற உழைப்பின் பருவடிவமாகிய அந்தப் பணம் தானாகவே அதிகரிக்க முடியாது. மார்க்ஸ் இக்கருத்துகளை மூலதனம் நூலின் 3ஆம் தொகுதியில் இன்னும் விரிவாக ஆராய்ந்தார். கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கையில் சுரண்டுகின்ற எல்லா வர்க்கத்தினர் மத்தியிலும் உபரி மதிப்பின் வினியோகத்தைப் பற்றிய கருதுகோளை மட்டும் விளக்குவதுடன் நிறுத்திக் கொண்டார்.

முதலாவதாக, லாபம் உபரி மதிப்பை, அதாவது பண்டத்தின் மொத்த மதிப்பில் தொழிலாளியின் உபரி உழைப்பு அல்லது கூலி கொடுக்கப்படாத உழைப்பு பருவடிவமாக்கப்பட்டிருக்கின்ற பகுதியை சாராம்சத்தில் பிரதிநிதித்துவம் செய்கிறது என்பதை மார்க்ஸ் எடுத்துக்காட்டினார். எனினும் மொத்த உபரி மதிப்பும் முதலாளிக்குக் கிடைப்பதில்லை. அப்படியானால் அது எவருக்குக் கிடைக்கிறது?

முதலாளி தன்னுடைய தொழிற்சாலையைக் கட்டுவதற்குத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த நிலத்தின் உடைமையாளரிடமிருந்து அதை வாடகைக்கு (இலவசமாக அல்ல) பெறுகிறார். அந்த வாடகை நிலத்தின் உடைமையாளருடைய வருமானமாகும். அத்தொழிலில் கிடைக்கின்ற மொத்த உபரி மதிப்பிலிருந்து நில வாடகை தரப்படுகிறது.

தொழிற்சாலை முதலாளி தன்னுடைய

பொருளாதார நடவடிக்கை மற்றும் உபரி மதிப்பை உற்பத்தி செய்வதற்கு அவசிய மான பணத்தை வழக்கமாக வங்கி முதலாளி யிடமிருந்து பெறுகிறார். உழைப்புச் சக்திக்குக் கூலி கொடுப்பதற்கு வாங்கப்படுகின்ற இப் பணம் கடைசியாகப் பார்க்கும் பொழுது உபரி மதிப்பை உற்பத்தி செய்கிறது. ஆனால் தொழிற்சாலை முதலாளி வங்கி முதலாளி யிடமிருந்து கடனாகப் பெற்ற மூலதனத் துக்கு வட்டி தர வேண்டும். அவர் வங்கி முதலாளிக்கு வட்டி தருகின்ற பொழுது தனக்குக் கிடைத்த உபரி மதிப்பில் ஒரு பகு தியை தியாகம் செய்கிறார். அவர் வட்டி யைக் கட்டிய பிறகு தொழில் அல்லது வர்த் தக லாபம் அவருக்கு மிஞ்சுகிறது என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்.

மேற்கூறியதிலிருந்து மார்க்ஸ் பின்வரும் பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுக்கு வரு கிறார்: ''வாடகை, வட்டி, தொழில் லாபம் இவை யெல்லாம் பண்டத்தின் உபரி மதிப்பினுடைய அல்லது அதில் உள்ளடங்கியுள்ள, ஊதியம் தரப்படாத உழைப்பினுடைய வெவ்வேறு பகுதி களின் வெவ்வேறு பெயர்கள் மட்டுமே; அவை ஒரே மாதிரியாக இந்த' ஊற்றுக்கண்ணிலி ருந்து மட்டுமே பெறப்படுகின்றன. அவை நேராக நிலத்திலிருந்து அல்லது நேராக மூல தனத்திலிருந்து பெறப்படுவதில்லை. ஆனால் நிலமும் மூலதனமும் அவற்றின் சொந்தக் காரர்களுக்கு, வேலைக்கமர்த்தும் முதலாளி தொழிலாளியிடமிருந்து பிழிந்தெடுக்கும்

உபரி மதிப்பிலிருந்து தங்கள் பங்குகளைப் பெற உதவுகின்றன.''*

வாடகை, வட்டி மற்றும் தொழில் லாபத்தைப் பற்றிய இந்த விளக்கத்தைக் கொண்டு மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்தில் பொருளாதார உறவுகளின் வடிவங்களைத் துல்லியமாக வகைப்படுத்தினார். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலுள்ள அடிப்படையான பொருளாதார உறவைத் தனியே பிரித்துக் காட்டினார். இக்கருத்தை நிறுவுகின்ற பொழுது அவர் பின்வருமாறு கூறினார்: ''வேலைக்கமர்த்தும் முதலாளி உபரி மதிப்பிலிருந்து இறுதியாகத் தனக்கென்று வைத்துக் கொள்ள முடியக் கூடிய பங்கு என்னவாக இருந்தாலும், இந்த உபரி மதிப்பைத் தொழிலாளியிடமிருந்து நேரடியாகப் பிழிந்தெடுப்பவன் அவனே தான், எனவே, வேலைக்கமர்த்தும் முதலாளிக்கும் கூலி உழைப்பாளிக்குமிடையே உள்ள இந்த உறவின் மீதுதான் முழுக் கூலி உழைப்பு முறையும் தற்போதைய முழு உற்பத்தி முறையும் நிலை கொண்டிருக்கின்றன.''** முதலாவது அகிலத்தின் பொதுக் கவுன்சில் கூட்டத்தில் பங்கெடுத்த உறுப்பினர்களில் சிலர் தம்முடைய சொற்பொழிவுகளில் இந்த அடிப்படையான பொருளாதார உறவை இரண்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 110.

** அதே நூல், பக்கங்கள் 110—111.

டாம் நிலையான ஒன்றாகக் காட்டுவதற்கு முயற்சி செய்தார்கள். மார்க்ஸ் அவர்களுடைய கருத்துகளை விமர்சனம் செய்தார்.

தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் இரண்டாம் நிலையான மற்றொரு கேள்வி மேற்கூறியதிலிருந்து தோன்றியது. முதலாளி தான் சுவீகரித்துக் கொண்ட உபரி மதிப்பை எப்படிப் பயன்படுத்துகிறார்? அவர் மொத்த உபரி மதிப்பையும் தனக்கு எடுத்துக் கொள் கிறாரா அல்லது அதில் ஒரு பகுதியை வாட கை மற்றும் வட்டியின் வடிவத்தில் மற்றவர் களுக்குத் தரும்படி நிர்ப்பந்திக்கப்படு கிறாரா? தொழிற்சாலை முதலாளி, நிலவுடை மையாளர், வங்கி முதலாளி ஆகியோருக்கு இடையில் ஏற்படுகின்ற பொருளாதார உறவு கள் சுரண்டுகின்ற வர்க்கத்தின் குழுவுக்கு இடையிலான உறவுகள் மட்டுமே; அவை தொழிலாளர்களை நேரடியாகப் பாதிப் பதில்லை.

உபரி மதிப்பு சுரண்டுகின்ற மூன்று வர்க் கங்களுக்கு இடையிலும் வினியோகிக்கப்படு கிறது என்னும் கருத்தை உருவாக்கியதன் மூலம் மார்க்ஸ் பண்டத்தின் மதிப்பின் உரு வாக்கத்தைப் பற்றி அன்று பரவலாக இருந்த கொச்சையான பொருளாதாரக் கருத்தை மறுக்க முடிந்தது. இக்கருத்தின்படி தொழிற் சாலை முதலாளி பண்டத்தின் மதிப்புடன் தன்னுடைய லாபத்துக்காக விருப்பப்படி யான மதிப்பைக் கூடுதலாகச் சேர்க்கிறார், பிறகு நிலவுடைமையாளருக்குத் தருவதற்கு

இன்னும் அதிகமான மதிப்பு சேர்த்துக் கொள்ளப்படுகிறது, இது இப்படியே தொடர்கிறது. கடைசியில் பண்டத்தின் மதிப்பு என்பது விருப்பப்படியாக நிர்ணயிக்கப்பட்ட மதிப்புகளின் மொத்தமாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இக்கருத்தின்படி வாடகை, வட்டி, லாபம் என்னும் மூன்று சுயேச்சையான மதிப்புகளை ஒன்றுசேர்த்து ஒரு பண்டத்தின் மதிப்பு உருவாக்கப்படுகிறது.

அறிக்கையின் 11ஆம் பிரிவு ''உபரி மதிப்பு பிரிவினையாகும் பற்பல பங்குகள்'' என்னும் லைப்புக் கொண்டிருக்கிறது. மார்க்ஸ் இப் ரிவில் ஒரு பண்டத்தின் உண்மையான திப்பு என்ன என்பதை எடுத்துக்காட்டு றார். மதிப்பின் முதல் பகுதி நுகர்வு செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் (மூலப் பொருட்கள், இயந்திரங்கள், இதரவை) மதிப்பு ஆகும். அதை வருமானம் என்று சொல்ல முடியாது; அது செலவிடப்பட்ட மூலதனத்தை ஈடு செய்கிறது. பண்டத்தின் மதிப்பின் எஞ்சிய பகுதி வருமானம் ஆகும். தொழிலாளியின் உழைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட, புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு மொத்த வருமானம் ஆகும். மதிப்பின் இப்பகுதி தொழிலாளியின் கூலியாகவும் உபரி மதிப்பாகவும்—அது தொடக்கத்தில் முதலாளிக்குக் கிடைக்கிறது—பிரிகிறது.

| செலவிடப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு | புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு | |
|---|---|---|
| | கூலி | உபரி மதிப்பு |

''லாபம், கூலி, விலைகள் இவற்றின் பொது விகிதாச்சாரம்'' என்னும் 12ஆம் பிரிவில் மார்க்ஸ் பண்டத்தின் மதிப்பின் குறிப்பிட்ட கட்டமைப்பைத் துல்லியமாக வர்ணித்தார்; அதே சமயத்தில், மொத்த வருமானத்தை, புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பை வினியோகம் செய்கின்ற பொழுது உருவாகின்ற பொருளாதார உறவுகளையும் வர்ணித்தார். செலவிடப்பட்ட உற்பத்திச் சாதனத்தின் மதிப்பை ஈடு செய்கின்ற மதிப்பை, அதாவது கடந்த காலத்திய உழைப்பின் மதிப்பைப் பண்டத்தின் மதிப்பிலிருந்து கழித்தால் தொழிலாளி ஒரு வேலை நாளின் போது தன்னுடைய உழைப்பின் மூலம் படைத்த மதிப்பு மட்டுமே மிஞ்சியிருக்கும். ஆகவே மார்க்ஸ் பின்வரும் முக்கியமான முடிவை வகுத்தளித்தார்: ''...உழைப்பு நேரத்தால் தீர்மானிக்கப்படும் இந்தக் குறிப்பிட்ட மதிப்புதான் தொழிலாளியும் முதலாளியும் தங்கள் தங்கள் பங்குகளை அல்லது ஈவுகளைப் பெற வேண்டியுள்ள ஒரே தொகை, கூலி

யாகவும் லாபமாகவும் பிரித்துக் கொள்ளப் பட வேண்டியுள்ள ஒரே மதிப்பு ஆகும். இந்த மதிப்பு இரு தரப்பாரிடையேயும் எத் தகைய வெவ்வேறான விகிதாச்சாரங்களில் பிரித்துக் கொள்ளப்பட்டாலும் அதன் அளவு மாற்றமடையாதென்பது தெளிவு.''* இதனைத் தொடர்ந்து தொழிலாளியின் கூலிக்கும் முதலாளியின் லாபத்துக்கும் இடையிலான உறவைப் பற்றி இன்னொரு முடிவு நிறுவப்பட்டது. தொழிலாளியின் உழைப்பினால் படைக்கப்பட்ட மதிப்பின் குறிப்பிட்ட அளவு பண்டத்தில் இருக்குமானால் அதன் பினியோகத்தில் தொழிலாளியின் பங்கு அதிகரிக்கின்ற அளவுக்கு அடுத்த தரப்பைச் சேர்ந்தவருடைய பங்கு குறையும். ''கூலி மாறினால் லாபமும் எதிர்த்திசையில் மாற்றமடையும். கூலி குறைந்தால், லாபம் அதிகரிக்கும்; கூலி அதிகரித்தால், லாபம் குறையும்.''**

புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளின் வருமானம் என்று பிரிவினையாதலைப் பற்றி மார்க்ஸ் விரித்துரைத்த கருதுகோளிலிருந்து மற்றொரு முக்கியமான முடிவு தோன்றுகிறது. அதைக் கொண்டு நாம் ''பணவீக்கச் சுழலேணித்'' தத்துவத்தை முற்றாகப் புதைக்க முடியும். கூலி அளவில் ஏற்படுகின்ற

---

* அதே நூல், பக்கம் 114.

** அதே நூல், பக்கம் 115.

மாற்றங்கள் அனைத்தும் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையில் புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பின் வினியோகத்தை மட்டுமே மாற்றுகின்றன, அதாவது கூலிக்கும் உபரிமதிப்புக்கும் அல்லது பண்டத்தில் பருவடிவமாக்கப்பட்டுள்ள கூலி கொடுக்கப்பட்ட உழைப்புக்கும் கூலி கொடுக்கப்படாத உழைப்புக்கும் இடையிலான விகிதத்தை மாற்றுகின்றன. ஆனால் இம்மாற்றங்கள் அனைத்தும் பண்டங்களின் மதிப்பின் மீது எவ்விதமான தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பண்டங்களின் மதிப்புகள் அவற்றில் அடங்கியிருக்கின்ற உழைப்பின் மொத்த அளவுகளினால் முற்றிலும் நிர்ணயிக்கப்படுகின்றன; இந்த அளவுகள் ஒவ்வொன்றிலும் கூலி கொடுக்கப்பட்ட மற்றும் கூலி கொடுக்கப்படாத உழைப்பு என்னும் பிரிவினையைச் சார்ந்திருப்பதில்லை. கூலி உயர்வு பண்டங்களின் விலைகளின் மட்டத்தின் மீது எவ்விதமான நேரடியான தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பது இதன் அர்த்தமாகும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் லாப விகிதம் நடைமுறையில் லாபத்துக்கும் (உபரி மதிப்பு) முதலீடு செய்யப்பட்டிருக்கின்ற மொத்த மூலதனத்துக்கும் இடையிலான விகிதமாகக் கணக்கிடப்படுகிறது என்னும் உண்மையை மார்க்ஸ் அறிக்கையில் சுட்டிக் காட்டினார். ஆனால் இந்த விகிதம் லாபத்தின் தோற்றுவாயை மூடி மறைக்

கிறது; ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களில் செய்யப்படுகின்ற முதலீடு தம்மளவில் மதிப்பை அதிகப்படுத்த முடியாது. அதே சமயத்தில், கூலித் தொழிலாளியை முதலாளி சுரண்டுதல் மறைக்கப்படுகிறது; லாபம் (உபரி மதிப்பு) அல்லது கூலி கொடுக்கப்படாத உழைப்பை உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது கூலி கொடுக்கப்பட்ட உழைப்பின் மதிப்புடன் தொடர்புபடுத்தினால் உபரி மதிப்பு விகிதத்தின் மூலமாக மட்டுமே அச்சுரண்டலைத் துல்லியமாக வெளிப்படுத்த முடியும், கணக்கிட முடியும்.

ஆகவே லாபத்தின் உருவாக்கம் மற்றும் வினியோகத்தைப் பற்றி மார்க்சின் கருதுகோள் முதலாளிகளின் செல்வத்தின் வளர்ச்சியின் உண்மையான தோற்றுவாயை, அதாவது கூலியுழைப்பை வெளிப்படுத்த உதவியது. புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு கூலியாகவும் லாபமாகவும் பிரிவினையாகின்ற பொழுது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான அடிப்படையான பொருளாதார உறவு பகை முரணியல்பான முறையில் வெளிப்படுகிறது என்பதை அது எடுத்துக்காட்டியது. உபரி மதிப்பைப் பெறுவதன் மூலம் செல்வர்களாகிக் கொண்டிருந்த சுரண்டும் வர்க்கத்தினர் அனைவரும் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்ட வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தை எதிர்ப்பதில் நெருக்கமாக ஒன்றுசேர்ந்திருப்பது ஏன் என்பதை இக்கருதுகோளைக்

கொண்டு விளக்க முடிந்தது. அதே சமயத்தில், உபரி மதிப்பைப் பிரித்துக் கொள்கின்ற சுரண்டல்காரர்களின் வெவ்வேறு குழுக்கள் மத்தியில் சண்டைகள் தோன்றக் கூடிய காரணங்களும் வெளிப்படையாகத் தெரிந்தன. இறுதியாக, லாபத்தின் உருவாக்கம் மற்றும் வினியோகத்தைப் பற்றிய கருதுகோள் தொழிலாளி வர்க்கம் சுரண்டும் வர்க்கத்தினரின் ஐக்கிய முன்னணியை வர்க்கப் போராட்டத்தின் தெளிவான செயல் திட்டமும் செயல்தந்திரமும் கொண்ட பாட்டாளி வர்க்க ஐக்கிய முன்னணியைக் கொண்டு எதிர்க்க வேண்டிய புறநிலையான அவசியத்தை விளக்கியது.

## தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தின் செயல்திட்டம்

மார்க்ஸ் கூலி, விலை, லாபம் என்னும் அறிக்கையில் தொழிலாளர்களின் பொருளாதார உரிமைகளுக்கான போராட்டத்தின் நுணுக்கமான செயல்திட்டத்தை முன்வைத்து அதை விஞ்ஞான ரீதியாக நிறுவினார். தொழிலாளர்களின் கூலி உயர்வுக்கான போராட்டம் அப்போராட்டத்தை அவசியமாக்குகின்ற உழைப்புச் சக்தியின் புனருற்பத்தி நிலைமைகளின் மாற்றங்களிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை என்று கருதுவது அச்செயல்திட்டத்தின் பிரத்யேகமான தன்மைகளில் ஒன்றாகும். ''கூலி உயர்வுக்காகவோ அல்லது அது குறைக்கப்படுவதை எதிர்த்தோ நடந்த போராட்டங்களின் முக்கிய செய்திகள்'' என்னும் 13ஆவது பிரிவில் மார்க்ஸ் அகல்விரிவான தத்துவப் பகுப்பாய்வின் மூலம் தொழிலாளர்கள் தம்முடைய கூலி அளவைப் பாதுகாப்பதற்கு அல்லது உயர்த்துவதற்குப் போராடுகின்ற முக்கியமான புறவயக் காரணங்களை வெளிப்படுத்தினார். அக்காரணங்கள் யாவை?

1. உழைப்புச் சக்தியின் மதிப்பில் மாற்றம். மார்க்சின் அறிக்கையில் ''உழைக்கும் சக்தி'' என்னும் 7ஆவது பிரிவில் உழைக்கும் சக்தி

யின் மதிப்புக்குச் சமமான கூலிகள் இன்றியமையாத பொருட்களின் மதிப்பினால் அல்லது அவற்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் அளவினால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை நிரூபித்தார். இன்றியமையாத பொருட்களின் மதிப்பு அவை உற்பத்தி செய்யப்படுகின்ற துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் மட்டத்தைச் சார்ந்திருக்கிறது. அந்த உற்பத்தித் திறன் அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். இதன் தொடர்பாக இங்கே தரப்படுகின்ற இரண்டு உதாரணங்களில் தொழிலாளர்களுக்கு இன்றியமையாத பொருட்களை உற்பத்தி செய்கின்ற துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் வேறுபடும் பொழுது தொழிலாளர்களது கூலிகள் மாறக் கூடும்.

முதல் உதாரணத்தில் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் அதே அளவு இன்றியமையாத பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அதிகமான உழைப்பு தேவைப்படுகிறது. ஆகவே தொழிலாளர்கள் நாள்தோறும் நுகர்வு செய்கின்ற இன்றியமையாத பொருட்களின் மதிப்பு அதிகரிக்கிறது. உழைப்புச் சக்தியின் மதிப்பும் அதற்கேற்ப அதிகரிக்கிறது. கூலிகள் அதற்கேற்ப அதிகரிக்கவில்லை என்றால் தொழிலாளி தன்னுடைய மாறாதிருக்கின்ற கூலியைக் கொண்டு முந்திய அளவுக்

குரிய இன்றியமையாத பொருட்களை வாங்க முடியாது; ஏனென்றால் அவற்றின் விலை அதிகரித்துவிட்டது. இந்த உதாரணத்தில் தொழிலாளர் கூலி உயர்வு கோரும் பொழுது தன்னுடைய உழைப்புச் சக்தியின் அதிகரித்துள்ள மதிப்பைக் கொடுக்குமாறு மட்டுமே கோருகிறார் என்பதை மார்க்ஸ் தொழிலாளர்களிடம் விளக்கினார். அவர் பண்டத்தை விற்பனை செய்கின்ற எந்த நபரையும் போலவே நடந்து கொள்கிறார்; பண்டத்தின் உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதன் தொடர்பாக, தன்னுடைய பண்டத்தின் மதிப்பின் அதிகரிப்பை முழுமையும் பெறுவதற்கு முயல்கிறார். இன்றியமையாத பொருட்களின் மதிப்பின் அதிகரிப்பை ஈடு செய்வதற்குக் கூலிகள் அதிகரிக்கவில்லையென்றால் அல்லது குறைவாக அதிகரிக்கின்றன என்றால் கூலி உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழே இறங்கிவிடும், தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் குறைந்து விடும்.

இரண்டாவது உதாரணத்தில் தொழிலாளியின் வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த உதாரணத்தில் உற்பத்திச் சக்தியின் மதிப்பு குறைகிறது, அதே அளவுக்குக் கூலிகளும் குறைகின்றன. அதன் விளைவாகத் தொழிலாளி முன்னர் வாங்கிய அதே அளவு பண்டங்களை வாங்குகிறார். ஆனால் தொழிலாளி ஒரு முழு வேலை நாளின்

போது முந்திய அளவைப் போலவே புதிய மதிப்பைப் படைக்கிறார். ஆகவே அவருடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக் குறைவு (கூலிக் குறைவு) முதலாளியின் லாபம் அதிகரிப்பதற்கு வழி வகுக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தொழிலாளர்களின் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற மொத்த லாபமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை, முதலாளி வர்க்கத்துக்கு மட்டுமே கிடைக்கிறது என்பதைப் பார்க்க முடியும். முதலாளி வர்க்கத்தின் சமூக பொருளாதார நிலை தனிமுதலாகவும் பாட்டாளி வர்க்கத்தை விட இன்னும் அதிகமாகவும் அபிவிருத்தி அடைகிறது. ஆகவே மார்க்ஸ் பின்வரும் முடிவுக்கு வருகிறார்: ''தொழிலாளியின் முழு வாழ்க்கைத் தரம் மாறாமல் அப்படியே இருக்குமாயினும், அவனுடைய சார்புநிலைக் கூலியும், அதையொட்டி முதலாளியின் சமூக அந்தஸ்தோடு ஒப்பிடும் போது அவனது சார்புநிலைச் சமூக அந்தஸ்தும் குறைவுபட்டேயிருக்கும். அவ்வாறாகச் சார்புநிலைக் கூலி குறைக்கப்படுவதைத் தொழிலாளி எதிர்த்துப் போராடினால், தனது சொந்த உழைப்பின் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்களின் விளைவில் குறித்த பங்கு பெற முயற்சிக்கவும் சமூக மட்டத்தில் தனது முந்திய சார்புநிலை அந்தஸ்தை நிலைநாட்டிக் கொள்ளவும் மட்டுமே அவன் முயல்கிறான்.''*

* அதே நூல், பக்கம் 119.

மார்க்சின் மேற்கூறிய முடிவு அதிகமான நடைமுறை முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய சமூக பொருளாதார உரிமைகளுக்கு இன்று நடத்துகின்ற போராட்டம் அதை நிரூபிக்கிறது. பாட்டாளி வர்க்க இயக்கம் கணிசமான பலத்தைப் பெற்றிருக்கின்ற நாடுகளில் தொழிலாளர்கள் தம்முடைய உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பதற்குத் தகுந்தவாறு முதலாளிகளுடன் கூலியை உயர்த்துகின்ற கூட்டு ஒப்பந்தங்களைச் செய்வதற்கு முயல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் தொழிலாளி வர்க்கத்தின் சில பிரிவுகள் மட்டுமே இதில் ஓரளவுக்கு வெற்றியடைந்திருக்கின்றன. அதுவும் கூட குறைந்த காலத்திற்கு மட்டுமே.

2. பணத்தின் மதிப்பில் ஏற்படுகின்ற மாற்றம். இன்றியமையாத பொருட்களின் மதிப்பும் ஆகவே உழைப்புச் சக்தியின் மதிப்பும் மாறாமலிருந்து பணத்தின் மதிப்புக் குறைவதாலேயே பண்டங்களின் விலைகளின் மட்டம் அதிகரிப்பது அடிக்கடி நடைபெறுகிறது. மார்க்ஸ் இதை எடுத்துக் கொண்டார். பணத்தின் அதாவது தங்கத்தின் மதிப்புக் குறைகின்ற பொழுது, அதன் ஒவ்வொரு அலகையும் (உதாரணமாக, ஒரு அவுன்ஸ் தங்கத்தை) உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்படுகின்ற உழைப்பின் அளவு குறையுமானால் இது நடைபெறும். அதன் விளைவாகப் பணத்தின் மதிப்பு பாதியாகக் குறைந்து

விட்டால் அப்பொழுது உழைப்புச் சக்தியின் மதிப்பு உட்பட எல்லாப் பண்டங்களின் மதிப்பும் முந்திய நிலையைக் காட்டிலும் இரு மடங்கு விலைகளில் எடுத்துரைக்கப் படும். வேறு வார்த்தைகளில் சொல்வதென் றால் விலைகள் இரண்டு மடங்காக அதிகரித் திருப்பதால் கூலிகளின் அளவும் இரண்டு மடங்கு அதிகரிக்க வேண்டும். ஆனால் கூலி கள் மாறாமலிருந்தால் அவை உழைப்புச் சக்தி யின் மதிப்பில் பாதி அளவுக்கு மட்டுமே சம மாக இருக்கும்; எல்லாத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் அதிகமாக வீழ்ச்சியடை வது இயற்கையே. கூலி அதிகரிக்கின்ற பொழுதும் இந்த வாழ்க்கைத் தரம் பாதிக் கப்படுகிறது; ஆனால் அது பணத்தின் மதிப்புக் குறைவு மற்றும் விலைகளின் அதிகரிப் புக்குப் பொருத்தமான விகிதாச்சாரத் தில் அல்ல. வாழ்க்கைத் தரம் குறைவதை எதிர்த்துப் போராடுகின்ற பாட்டாளி வர்க்கம் இந்த உதாரணத்தில், தாங்கள் விற்பனை செய்கின்ற பண்டம், உழைப்புச் சக்தியின் விலை எல்லா விலைகளும் அதிகரித்திருக் கின்ற அதே அளவுக்கு உயர வேண்டும் என்று தான் கோருகிறது. இக்கோரிக்கை பண்ட உற்பத்தி விதிகளுக்கு முற்றிலும் பொருந்து கிறது.

முந்திய வரலாற்றுக் காலம் முழுவதி லும் முதலாளி இந்த சாதகத்தை சுறுசுறுப் பாகப் பயன்படுத்திக் கொண்டார், பணத்தின் மதிப்புக் குறைந்த பொழுது தொழிலாளர்

களை மோசடி செய்தார் என்பதை மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். 1860க்களின் மத்தியில் புதிய தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் வெள்ளிச் சுரங்கங்களிலிருந்து வெள்ளி அதிக அளவில் வெட்டியெடுக்கப்பட்டதன் விளைவாகப் பணத்தின் மதிப்பு கணிசமாகக் குறைந்தது, கூலி அளவு மாறவில்லை என்ற போதிலும் பண்டங்களின் விலைகள் அதிகரித்தன. இதன் விளைவாக ஐரோப்பாவில் பல நாடுகளில் தொழிலாளர்கள் ஒரே சமயத்தில் கூலி உயர்வு கோரினார்கள்.

பணம் தொடர்ச்சியாக மதிப்புக் குறைதல் இன்றைய முதலாளித்துவ உலகத்தின் குறியடையாளமாகும்; தங்கம் மலிவாக உற்பத்தி செய்யப்படுவதனால் இது நடைபெறவில்லை; ஏகபோகங்களும் ஏகாதிபத்திய அரசுகளும் பின்பற்றுகின்ற விலைக் கொள்கையினால் இது ஏற்படுகிறது. ஆகவே அதிகார பூர்வமான விலைக் குறியீட்டெண்களின்படி விலைகள் அதிகரிப்பதற்குத் தகுந்தவாறு கூலியும் உயர வேண்டும் என்னும் முக்கியமான ஷரத்தைக் கொண்ட கூட்டு ஒப்பந்தங்களை முதலாளிகளுடன் நிறைவேற்றுவதற்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த வலிமையான தொழிற் சங்கங்கள் முயல்கின்றன. ஆனால் எல்லா முதலாளிகளும் இந்த நிபந்தனையை ஒத்துக் கொள்வதில்லை; ஒத்துக்கொண்டவர்கள் கூட தமக்குச் சாதகமான நேரத்தில் அதை

நிறைவேற்றுவதற்குத் தவறுகிறார்கள். முதலாளித்துவ அரசு அவர்களுக்கு உதவி செய்கிறது; அது பணவீக்கம் நிலவுகின்ற பொழுது ''கூலி முடக்கக்'' கொள்கையைப் பின்பற்றுவதனால் (பண்டங்களிலும் சேவைகளிலும் எடுத்துரைக்கப்படுகின்ற) உண்மையான கூலிகள் குறைகின்றன.

3. வேலை நேரத்தை அதிகப்படுத்துதல் மற்றும் உழைப்பைத் தீவிரப்படுத்துதல். மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் சுட்டிக் காட்டியபடி கூலி அளவை நிறுவுவதற்கு வேலை நேரத்தின் அளவைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். முதலாளிகள் வேலை நேரத்தை இயன்ற அளவுக்கு அதிகப் படுத்துவதற்கு, உடலியல் ரீதியில் தொழிலாளர்கள் தாங்கக் கூடிய கடைசி அளவுக்கு அதிகப்படுத்துவதற்கு எப்பொழுதும் முயற்சிக்கிறார்கள். ஏனென்றால் வேலை நேரத்தை அதிகப்படுத்துகின்ற பொழுது கூலி கொடுக்கப்படாத உபரி உழைப்பு அதிகரிக்கிறது, அதன் மூலம் ஏற்படுகின்ற முதலாளிகளின் லாபம்அதிகரிக்கிறது. ஆனால் தொழிலாளிதன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்கின்ற பொழுது முதலாளி அந்த உழைப்புச் சக்தியை அழித்து விடாமல் அதைப் பாதுகாக்க, சில எல்லைகளுக்கு உட்பட்டு அதை, நுகர்வு செய்கின்ற வாய்ப்பை அளிக்கிறார். மேலும் வேலை நேரம் வழக்கமான எல்லைகளைத் தாண்டி அதிகப்படுத்தப்பட்டால் ஒரு நபருடைய உழைப்புச் சக்தி, வேலை

செய்வதற்கு அவரிடமுள்ள ஆற்றல் மிகவும் வேகமாக அழியக் கூடும் என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பங்கள் வேலை நேரத்தைச் சட்ட ரீதியாக நிர்ணயிக்க வேண்டும் என்று தொழிலாளி வர்க்கத்தைப் போராடச் செய்திருக்கின்றன. தொழிலாளர்கள் நியாயமான வேலை நேரத்தைப் பெற முடியாத பொழுது "...தங்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட உபரி நேரத்துக்கு ஏற்ற வீதாச்சாரத்தில் மட்டுமன்றி, அதற்கும் அதிகமான வீதாச்சாரத்தில் கூலியை உயர்த்தி மட்டுமீறிய வேலையைக் கட்டுப்படுத்த முயற்சிகள் செய்வதன் மூலம் அவர்கள் தங்களுக்கும் தங்கள் இனத்துக்கும் ஆற்ற வேண்டிய கடமையைத்தான் நிறைவேற்றுகிறார்கள்"* என்று மார்க்ஸ் கூறுகிறார்.

வேலை நேர அதிகரிப்புக்குத் தகுந்தவாறு கூலி உயர்வுக்குத் தொழிலாளர்கள் போராடுகின்ற பொழுது அந்த உயர்வு தங்களுடைய உழைப்புச் சக்தியின் அதிகரித்த தேய்மானத்தை ஈடு செய்யும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கே முதலாளி தொழிலாளர்களை மோசடி செய்து விடலாம். முதலாளி வேலை நேரத்தை அதிகப்படுத்தி கூலியை உயர்த்தலாம்; எனினும் தொழிலாளர்களுடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் குறைவான கூலியைக் கொடுக்க

---

* அதே நூல், பக்கம் 123.

லாம். அத்தகைய நிலைமைகளில் உழைப்புச் சக்தியின் விற்பனை மற்றும் பயன்படுத்தும் நிலைமைகள் மோசமடைவதைத் தொழிலாளர்கள் எதிர்க்க வேண்டும்; ஏனென்றால் ''பிழிந்தெடுக்கப்படும் கூடுதல் உழைப்பினளவுக்கும் அதனால் உழைக்கும் சக்திக்கு அதிவிரைவாக ஏற்படும் சேதாரத்துக்கும் ஈடாகக் கூலி உயரவில்லை....''*

வேலை நேரம் மாறாமலிருந்து உழைப்பு கணிசமான அளவுக்குத் தீவிரப்படுத்தப்படுகின்ற பொழுதும் தொழிலாளர்கள் கூலி உயர்வுக் கோரிக்கையை எழுப்புகிறார்கள். உழைப்பு தீவிரப்படுத்தப்படுகின்ற பொழுது தொழிலாளி முன்பு இரண்டு மணி நேரத்தில் செலவிட்ட உழைப்பை ஒரு மணி நேரத்தில் செலவிடும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார். சகஜமான நிலைமைகளில், உழைப்பு தீவிரமாக்கப்படுகின்ற அதே அளவுக்குப் பாட்டாளி வர்க்கத்தின் வேலை நேரமும் குறைய வேண்டும். உழைப்பு தீவிரமாக்கப்படுதலின் அதிகரிப்பு வேலை நேரத்தைக் குறைப்பதன் மூலம் ஈடு செய்யப்படாவிட்டால் மிகவும் நீண்ட வேலை நேரத்தைப் போன்று அதுவும் அழிவுண்டாக்கக் கூடியதே. எனவே மார்க்ஸ் பின்வரும் முடிவுக்கு வந்தார்: ''உழைப்பின் தீவிரம் அதிகரிப்பதற்கு ஏற்பக் கூலியும் உயர வேண்டும் என்று போராடுவதன் மூலம் மூலதனத்தின் இந்தப் போக்கை தட்டுக்

* அதே நூல், பக்கம் 124.

படுத்துவதில், தொழிலாளி, தனது உழைப்பு மதிப்பு குறைவதையும் தனது இனம் க்ஷீணிப்பதையும் எதிர்க்க மட்டுமே செய்கிறான்.''*

4. பண்டங்களின் சந்தை விலைகள் மற்றும் கூலிகளில் சுழற்சி மாற்றங்கள். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் குறியடையாளமான முதலாளித்துவச் சுழற்சியின் பின்வரும் கட்டங்கள் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு திரும்பத் திரும்ப நிகழ்வதை மார்க்ஸ் தன் அறிக்கையில் சுட்டிக் காட்டினார். நெருக்கடி (பண்டங்களின் மிகையுற்பத்தியும் உற்பத்தியின் வீழ்ச்சியும்), மந்தம் (பொருளாதாரத்தில் தேக்கநிலை), மீட்சி (நெருக்கடிக்கு முந்திய உற்பத்தி மட்டம் மறுபடியும் ஏற்படுதல்), ஓங்கு வளர்ச்சி (பொருளாதார வளர்ச்சி நெருக்கடிக்கு முந்திய கட்டத்தை விஞ்சி முன்னேறுதல்) ஆகியவை இக்கட்டங்களாகும். ஓங்கு வளர்ச்சிக்குப் பிறகு ஒப்புநோக்கில் குறுகிய காலம் முடிந்ததும் மிகையுற்பத்தியும் மந்தமும் மறுபடியும் ஏற்படுகின்றன. சுதந்திரப் போட்டிக் காலகட்டத்தில் இச்சுழற்சி மாற்றங்கள் சந்தை விலைகளைப் பாதிக்கின்றன: நெருக்கடியின் போது அவை வீழ்ச்சியடைகின்றன; மந்தத்தின் போது அவை மிகவும் கீழ்நிலையில் இருக்கின்றன; மீட்சிக் கட்டத்தில் அவை படிப்படியாக உயர்கின்றன; ஓங்கு வளர்ச்சிக் கால கட்டத்தில் அவை வேகமாக அதிகரிக்

---

* அதே நூல், பக்கம் 125.

கின்றன. முதலாளித்துவச் சுழற்சிக் கட்டங்களுக்கு ஏற்ற சந்தை விலைகள் (நெருக்கடி மற்றும் பொருளாதார மந்தத்தின் போது) அவற்றின் சராசரி மட்டத்துக்கும் கீழே இறங்குகின்றன அல்லது (மீட்சி மற்றும் ஓங்கு வளர்ச்சிக் கட்டத்தில்) அதைக் காட்டிலும் கூடுதலாக அதிகரிக்கின்றன. மொத்த சுழற்சியையும் எடுத்துக் கொண்டால் சந்தை விலையில் ஏற்படுகின்ற ஒரு மாற்றம் மற்றொரு மாற்றத்தினால் ஈடு செய்யப்படுகிறது, சராசரியில் மொத்த சுழற்சியின் வரையறைகளுக்குள் பண்டங்களின் சந்தை விலைகள் அவற்றின் மதிப்புகளினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

சுழற்சி மாற்றங்கள் அனைத்தும் கூலி அளவின் மீது பொருத்தமான முறையில் தாக்கம் செலுத்துகின்றன. சுழற்சியின் பாதகமான கட்டங்களில் கூலிகள் தவிர்க்க முடியாதபடி குறைகின்றன. ஆகவே பாட்டாளி வர்க்கம் தன்னுடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக்குப் பொருத்தமான சராசரிக் கூலியைப் பெற வேண்டுமென்றால் கூலி உயர்வு கோரித் தொடர்ச்சியாகப் போராட வேண்டும். நெருக்கடி மற்றும் மந்தக் கட்டங்களில் தொழிலாளர்களுடைய கூலி குறையும் என்றாலும் அவர் மோசடி செய்யப்படாமலிருக்க வேண்டுமென்றால் ''...மார்க்கெட் விலைகளின் இப்படிப்பட்ட வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், எந்த விகிதாச்சார அளவுக்குக் கூலியைக் குறைப்பது அவசியமாகி

விட்டது என்பதைக் குறித்து அவன் முதலாளி யோடு தர்க்கித்துப் போராட வேண்டும். சுபிட்சக் கட்டங்களின் போது, கூடுதலான லாபங்கள் ஏற்படும் சமயத்தில் அவன் கூலி உயர்வுக்குப் போராடவில்லை என்றால் ஒரு தொழில் வட்டம் முழுவதையும் சராசரியாக எடுத்துக் கொண்டு பார்க்கையில், அவன் தனது சராசரிக் கூலியை... கூடப் பெறமாட்டான்''* என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

அவர் சாத்தியமான எல்லா உதாரணங்களையும்—இவை 100க்கு 99 என்று சொல்லலாம் — பகுப்பாய்வு செய்வதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தின் இயல்பை விளக்கினார். அது சாராம்சத்தில் முதலாளித்துவத்தின் நிலைகளின் மீது செய்யப்படுகின்ற தாக்குதல் அல்ல, அது எதிர்த்தாக்குதல், அதாவது பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை முதலாளி வர்க்கம் தொடர்ச்சியாகக் குறைத்துக் கொண்டிருப்பதை எதிர்க்கின்ற முயற்சியே ஆகும். மார்க்ஸ் தன் முடிவைப் பின்வரும் சொற்களில் தொகுத்துக் கூறினார்: ''கூலி உயர்வுக்கான போராட்டம் முன் நிகழ்ந்த மாற்றங்களின் அடிச்சுவட்டையொட்டியே நடைபெறுகிறது என்பதையும், உற்பத்தி அளவில், உழைப்பின் உற்பத்தித் திறன்களில், உழைப்பின் மதிப்பில், பணத்தின் மதிப்பில், பிழிந்தெடுக்கப்

* அதே நூல், பக்கம் 126.

பட்ட உழைப்பின் நேர நீடிப்பில் அல்லது தீவிரத்தில், கிராக்கி, சப்ளை இவற்றின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்தும் தொழில் வட்டத்தின் பல்வேறு கட்டங்களையொட்டியும் மார்க்கெட் விலைகளின் ஊசலாட்டங்களில் முன்னரே ஏற்பட்ட மாற்றங்களின் தவிர்க்க முடியாத விளைவே இந்தக் கூலி உயர்வுப் போராட்டம் என்பதையும், சுருங்கச் சொன்னால் மூலதனத்தின் முந்திய நடவடிக்கைக்கெதிரான உழைப்பின் எதிர் நடவடிக்கைகளே இந்தக் கூலி உயர்வுப் போராட்டம் என்பதையும் நீங்கள் கண்டீர்கள்.''*

தொழிலாளர்களின் இத்தகைய பொருளாதாரப் போராட்டம் நம் காலத்தில் கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1980க்களின் ஆரம்பத்தில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் நிலவிய சமூக பொருளாதார நிலைமை இதை வன்மையாக நிரூபிக்கிறது. 1980—1982ஆம் ஆண்டுகளில் நிலவிய தீவிரமான பொருளாதார நெருக்கடியின் போது உண்மையான கூலிகளைக் குறைத்த முதலாளிகளும் முதலாளித்துவ அரசும் 1983இல் பல நாடுகளில் தொழிலாளர் நலன்களுக்கு விரோதமான திட்டங்களைத் தயாரித்துச் சட்டமாக்கின. 1984இல் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கு எதிராக ஒடுக்குமுறை நடவடிக்கை

---

* அதே நூல், பக்கம் 127.

சமூகக் கூறினால் நிர்ணயிக்கப்பட்ட மேல் எல்லையைக் கொண்டிருக்கிறது. முதலாளிகள் கூலியை உழைப்புச் சக்தியின் மதிப்பின் கீழ் எல்லைக்குக் குறைப்பதன் மூலம் லாபத்தை அதிகப்படுத்துவதற்கு எப்பொழுதும் முயற்சி செய்கிறார்கள். மார்க்ஸ் ஏராளமான விவரங்களைப் பொதுமைப்படுத்திப் பின்வரும் கருத்துரையைக் கூறினார்: ''...முதலாளித்துவ உற்பத்தி முறையின் பொதுவான போக்கு கூலியின் சராசரி அளவைக் குறைப்பதாக அல்லது உழைப்பின் மதிப்பைக் கிட்டத்தட்ட அதன் குறைந்தபட்ச வரம்புக்குத் தள்ளுவதாக இருக்கிறதே தவிர, அதை யர்த்துவதாக இல்லை.''* பாட்டாளி வர்க்த்தின் பொருளாதாரப் போராட்டத்தின் மாபெரும் முக்கியத்துவம் முற்றிலும் வெளிப்படையாகும். மூலதனம் உழைப்பைக் கொள்ளையடிப்பதைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர்களுடைய நிலைமையில் தற்காலிகமான முன்னேற்றத்தை ஏற்படுத்துமாறு அறைகூவப்படுகிறது. தொழிலாளர்கள் இப்போராட்டத்தை நடத்தாவிட்டால் அவர்கள் ''கடைத்தேற வகையற்ற ஒன்றுமில்லாத பஞ்சைக் கும்பலுக்குச் சமமான நிலைக்கு இறங்கி விடுவார்கள்''** என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

கூலிகளின் உண்மையான அளவு மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் தொடர்ச்சி

---

* அதே நூல், பக்கம் 135.
** அதே நூல், பக்கம் 136.

யான போராட்டத்தின் மூலமாக மட்டுமே நிறுவப்படுகிறது என்பதை மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையில் விளக்கினார். இப்போராட்டம் ஒரு நாள் வேலை நேரத்தைச் சட்டரீதியாக வரையறுப்பதற்கு இட்டுச் செல்கிறது. இக்காலத்தில் தொழிலாளர் இயக்கம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை வலுவடைந்து கொண்டிருக்கிறது, அதன் சர்வதேச ஒருமைப்பாடு பலமடைந்து கொண்டிருக்கிறது, உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் மீது உலக சோஷலிச அமைப்பின் தாக்கம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இவை எல்லாமே சமூக உரிமைகளுக்குத் தொழிலாளர்களுடைய போராட்டத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றன.

அன்றாடப் பொருளாதாரப் போராட்டத்தின் முடிவான விளைவுகளைத் தொழிலாளர்கள் மிகைப்படுத்தக் கூடாது என்று மார்க்ஸ் எச்சரித்தார். "விளைவுகளை எதிர்த்து அவர்கள் போராட்டம் நடத்துகிறார்களே தவிர, அந்த விளைவுகளுக்கான காரணங்களை எதிர்த்தல்ல; தங்களது நிலைமையை மோசமாக்கும் போக்கை அவர்கள் தடுத்து நிறுத்துகிறார்களே தவிர, அதன் திசைவழியை மாற்றவில்லை; அவர்கள் நோயின் கடுமையைத் தணித்துக் கொள்கிறார்களே தவிர, நோயை குணப்படுத்திக் கொள்ளவில்லை. இவற்றைத் தொழிலாளர்

கள் மறந்துவிடக் கூடாது.''* ஆகவே தொழிலாளர்கள் முதலாளிகளுடன் இத்தகைய மோதல்களுடன் நின்றுவிடக் கூடாது. சமூகத்தைத் தீவிரமாகத் திருத்தியமைப்பதற்கு அவசியமான பொருளாயத நிலைமைகள் மற்றும் சமூக வடிவங்களை முதலாளித்துவ அமைப்பு படைக்கிறது என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். பெரிய அளவு இயந்திர உற்பத்தி சமூக இயல்பைக் கொண்டிருக்கிறது, சமூகத்தின் எல்லா உறுப்பினர்களின் நலனுக்கு மொத்த சமூகம் அதை நிர்வகிக்க வேண்டும். இதன் தொடர்பாக, ''நியாயமான வேலை நாளுக்கு நியாயமான கூலி'' என்னும் பழைய கோஷத்துக்குப் பதிலாகக் ''கூலி உழைப்பு முறை ஒழிக!'' என்னும் புரட்சிகரமான கோஷத்தைத் தொழிலாளர்கள் தங்களுடைய பதாகையில் பொறித்துக் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் ஆலோசனை கூறினார்.

மார்க்ஸ் தன்னுடைய அறிக்கையை முடிக்கின்ற பொழுது தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தைப் பற்றித் தன்னுடைய மதிப்பீடுகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறி இப்போராட்டத்தைக் கூலி உழைப்பு முறையை முடிவாக ஒழிக்கின்ற புரட்சிகர அரசியல் போராட்டத்துடன் இணைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்ற தீர்மானத்தை முதலாவது

---

* அதே நூல், பக்கம் 136.

அகிலத்தின் பொதுக் கவுன்சில் நிறைவேற்ற வேண்டும் என்று முன்மொழிந்தார்.

மார்க்சின் பொருளாதாரத் தத்துவம் பின் வரும் புரட்சிகரமான முடிவை விஞ்ஞான ரீதியாக நிறுவுவதற்கு உதவியது. முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான புரட்சிகரப் போராட்டம் மட்டுமே தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டலின் எல்லா வடிவங்களிலிருந்தும் முடிவாக விடுதலை செய்யும்; வேலையில்லாத் திண்டாட்டம், நெருக்கடிகள், பணவீக்கம், சுரண்டும் வர்க்கத்தினருக்குக் கட்டாய உழைப்பு ஆகியவற்றிலிருந்து தொழிலாளி வர்க்கத்தை நிரந்தரமாக விடுவிக்கும். இந்த விஞ்ஞான முற்காட்சி சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிச நாடுகளில் நிறைவேறிவிட்டது. அங்கே தொழிலாளர்களின் ஆட்சியதிகாரம் நிறுவப் பட்டுவிட்டது, சமூகத்தின் எல்லா உறுப்பினர்களின் பொருளாயத மற்றும் கலாசார மட்டத்தை உயர்த்துகின்ற நோக்கத்துடன் சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தி வளர்க்கப் படுகிறது.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவெட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

ஷோ-ரூம்
136, அண்ணாசாலை, சென்னை—600002

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7 சிங்காரத் தோப்பு,
திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்
3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ்,
உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில்,
திண்டுக்கல்—624001

21

முன்னேற்றப் பதிப்பகம், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள், கட்டுரைகளோடு கூட மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைக் கற்பவர்களுக்கு உதவும் பொருட்டு மார்க்சிய-லெனினிய ஆசான்களின் தனிப்பட்ட படைப்புகளைப் பற்றிய சிறு பிரசுரங்களையும் வெளியிடுகிறது.

பேராசிரியர் இ. பரீஸவ் எழுதிய இப்பிரசுரம் கா. மார்க்சின் ''கூலி, விலை, லாபம்'' என்ற நூலை வாசகர்களுக்குச் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறது. மார்க்சிய பொருளாதாரப் போதனையின் அடிப்படைகள் மார்க்சின் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இன்று முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் உள்ள தொழிலாளி வர்க்கம் தன் பொருளாதார, சமூக உரிமைகளுக்காக நடத்தும் போராட்டத்திற்கும் இந்த மார்க்சிய போதனைக்கும் இடையிலான தொடர்பை பரீஸவ் விளக்குகிறார்.

முன்னேற்றப் பதிப்பகம்

ISBN 5-01-0001462-9